# பெருந்தோட்ட உற்பத்தியில் பெண்தொழிலாளர்கள்

றேஷல் குரியன்

சமூக விஞ்ஞானிகள் சங்கம்
2000

# பெருந்தோட்ட உற்பத்தியில் பெண்தொழிலாளர்கள்

றேஷல் குரியன்

சமூக விஞ்ஞானிகள் சங்கம்
425/15, திம்பிரிகஸியாய வீதி,
கொழும்பு 5, இலங்கை.

டாக்டர். றேஷல் குரியன் ஹேக்கில் (Hague) உள்ள சமூகக் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கிறார். இவர் பெருந்தோட்டத்துறை பற்றி பரந்த அளவில் எழுதியுள்ளார்.

# பெருந்தோட்ட உற்பத்தியில் பெண்தொழிலாளர்கள்

இலங்கையில் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியில் பெண்கள் பெரும்பங்காற்றி உள்ளார்கள். 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் புலம்பெயர்ந்த ஊழியபடையில் இவர்கள் முக்கிய இடத்தைப் பிடித்தனர். மேலும் பின் தொடர்ந்த காலங்களில் பெருந்தோட்டத்துறையில் வேலைக்கமர்த்தப்பட்டோரில், அரைப் பங்கிற்கும் மேலாகவே பெண்கள் இருந்தனர். இவர்களால் செய்யப்பட்ட வேலை கடுமையானதாகவும், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டியதாகவும், நேரத்தை உறிஞ்சுவதாகவும் அமைந்தது. அதனுடன் சேர்த்து வீட்டில் புருஷர்களையும், பிள்ளைகளையும், முதியோரையும் மற்றும் சுகவீனமுற்றோரையும் பராமரிக்க வேண்டியிருந்தது. அது மட்டுமல்லாமல் துவைத்தல், சமைத்தல், துப்புரவு செய்தல் போன்ற வீட்டு வேலைகளனைத்தையும் செய்ய வேண்டியிருந்தது. பெருந்தோட்டத்தில் அவர்கள் கடைசிப் படிநிலையில் வரிசைப்படுத்தப்பட்டார்கள். ஆகவே அவர்கள் ஒழுங்கு வரிசைப்படி ஆண் தொழிலாளரைவிட குறைந்த சம்பளம் பெற்றார்கள். அவர்கள் எப்போதுமே ஆண் மேற்பார்வையின் கீழ் வேலை செய்தார்கள். அதனால் ஆண்களின் துஷ்பிரயோகத்துக்கும் அவர்கள் முகங்கொடுக்க வேண்டி இருந்தது.

பெருந்தோட்ட உற்பத்தி வரலாற்றில் அவர்களுடைய ஈடுபாடு தகுந்த அளவில் அங்கீகரிக்கப்படவோ, கணக்கெடுக்கப்படவோ இல்லை. இந்தியாவிலிருந்து பெருந்தோட்டத்தில் வேலை செய்ய வந்து, பின்னர் திரும்பிச் சென்றோர் தொகையின் புள்ளி விபரங்கள் சில கிடைத்துள்ளன. பெருந்தோட்டத் துறையின் ஊழியபடையில் அவர்களும் அங்கம் வகித்ததாக ஆங்காங்கே குறிப்புகள் கூறுகின்றன. அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள், சோதனைகள் மற்றும் மனக்கொந்தளிப்புகளும், அவற்றை அவர்கள் எதிர்நோக்கிப் போராடி இறந்தது பற்றிய விபரங்களும், சொற்ப அளவிலேயே கவனத்திற் கெடுக்கப்பட்டுள்ளன. 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இவர்களுடைய வாழ்க்கை மற்றும் தொழில் அனுபவங்கள் பற்றி மீளாய்வு செய்வதே இத்தனிவரைபின் நோக்கமாகும்.

## இலங்கையில் பெருந்தோட்ட உற்பத்தித்துறையின் வளர்ச்சி

மேற்கு ஐரோப்பாவில் கைத்தொழில் முகாமைத்துவம் ஸ்தாபிக்கப்பட்ட அதேவேளையில், இலங்கயைில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சி நிலவியது. குறிப்பாக, 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உற்பத்தித்துறை விரிவடைந்ததன் காரணமாக மூலப்பொருட்களுக்கும், மலிவான நுகர்வுப் பொருட்களுக்கும் பெருமதிப்பு ஏற்பட்டது. இந்த மூலப் பொருட்கள் கைத்தொழிலுக்கு அவசியமாகத் தேவைப்பட்டது. அதேவேளை, மலிவான நுகர்வுப் பொருட்கள், ஐரோப்பாவில் வளர்ந்துவரும் தொழிலாளர் வர்க்கத்துக்குள், வேதன நுகர்வுப் பொருளாக முக்கிய இடத்தைப் பெற்றது. காலனிகளே இவ்வுற்பத்திகளுக்கு மூலாதாரமாக விளங்கியது. காலனிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்திகளை ஊக்குவிப்பதே காலனித்துவக் கொள்கையாக அமைந்தது. இவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்திகளை ஊக்குவிப்பதே காலனித்துவக் கொள்கையாக அமைந்தது. 1830 களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்திய இத்தகைய கொள்கைப் பாங்கின் செல்வாக்கினால் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியடைந்தது.

ஆரம்ப காலத்தில் இத்தீவின் மத்திய பகுதியில் சிறிய அளவில் தொடங்கிய கோப்பிச் செய்கை, பின்பு பெருந்தோட்டத்துறையின் மையமாக விளங்கியது. மேலும் ஜமேக்கா, பொமினிகா, கயானா ஆகிய இடங்களில் அடிமைமுறை நீக்கப்பட்டு மேற்கிந்திய கோப்பிகளின் முன்னுரிமைவரியும் நீக்கப்பட்டதனால் இத்துறையின் செல்வாக்கு மேலோங்கியது. மலிவு விலையில் காணி (மானிய அடிப்படை), கோப்பிச் செய்கைக்கு வேண்டிய சாதனங்களுக்கு வரிவிலக்களித்தல் (இயந்திரம், காணிவரி மற்றும் பல) போன்ற பொருளாதார ஊக்குவிப்பு மூலம் கோப்பிச் செய்கையை தனியார் துறையினர் ஈடுபட காலனித்துவ ஆட்சியாளர்கள் ஊக்கம் அளித்தனர்.

இந்த வாய்ப்பை தனியார் துறையினர் மிக விரைவாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாகத் தற்போது மத்திய ஊவா மாகாணமாக விளங்கும் (பழைய பாரம்பரிய கண்டி இராச்சியம்) தீவின் மத்திய பகுதி மலைப் பிரதேசங்களில் கோப்பிப் பெருந்தோட்டங்கள் பரவின. எவ்வாறாயினும் ஹொமீலியா வஸ்டரிக்ஸ் (Hemileia Vastarix) என்ற இலை பூஞ்சணம் 1869ம் ஆண்டில் தோன்றியதன் காரணமாக கோப்பிச் செய்கை படிப்படியாக அழியத் தொடங்கி, 1880ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முற்றாகவே அழியும் நிலைக்கு வந்தது. 1880ம் ஆண்டில் கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியினால் தோட்டங்கள் பல கைமாறின. மாற்றுப் பயிர்ச் செய்கை செய்வதில் கவனம் திருப்பப்பட்டது. (கொறையா 1975:7, ஸநொட்கிறாஸ் 1966:110F). மண்வளமும், சீதோஷண நிலையும் தேயிலைச் செய்கைக்குச் சாதகமாக இருந்தது. (Ferguson 1893:77F). இருந்தாலும், கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியின் விளைவாகவே தேயிலைச் செய்கையின் விரிவாக்கம் இடம்பெற்றது. 1886ம் ஆண்டிற்குப் பின்னர்தான் தேயிலைச் செய்கையின் நிலப் பரப்பளவு, கோப்பிச் செய்கையினதை விட விரிவடைந்தது. 1880இல் பெரும்பாலானவை; டிம்புள்ள, டிக்கோயா, மஸ்கெலிய, கலனிப் பள்ளத்தாக்கு, தொளஸ்பாகே, புஸல்லாவ, மாத்தளை மாவட்டங்களில் அமைந்தன. மேலும், 1892இல் 1000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட 11 தோட்டங்கள் இருந்தன.

1876ஆம் ஆண்டு அளவில் இறப்பர் செய்கை இத்தீவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் 1899ம் ஆண்டு ஏற்பட்ட விலை உயர்வின் விளைவாகவும், இலங்கைத் தாவரவியல் தோட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சீர்திருத்தப் பரிசோதனையின் விளைவாகவும், இச்செய்கை வர்த்தக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. மோட்டார்கார் கைத்தொழில் விரிவடைந்ததாலும் முதலாவது உலகமகாயுத்தம் நடந்தமையாலும் இறப்பருக்கு மேலதிக மதிப்பும் விலையும் ஏற்பட்டது. நாட்டில் இக்கைத்தொழிலுக்கு இதுவே பாரிய தூண்டுதலாக அமைந்தது.

வரலாற்று ரீதியாக, தென்னை ஒரு சாமான்ய பயிர்ச்செய்கையாக இருந்தது. இது 1840 இல் இருந்து பெருந்தோட்ட அடிப்படையில் செய்கை பண்ணப்பட்டது. (றொபேர்ட்ஸ் & விக்ரமரட்ன 1973:103). 1850 தொடக்கம் தென்னஞ்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பளவு, குறிப்பிடும்படியாக வளர்ச்சியுற்றது. விலை அதிகரிப்பும், செய்கைக்காக மேலதிக அரச காணிகள் விற்பனவு செய்யப்பட்டதுமே இதற்குக் காரணமாகும். செய்கையின் முக்கிய விஸ்தரிப்புக்குள்ளான பகுதி தென்மேற்குக் கரையோரப் பகுதியில் அமைந்தது. இதர பகுதி கிட்டத்தட்ட கொழும்பு, அம்பேபுஸ்ஸ, குருநாகல், சிலாபம் என்ற பகுதியை உள்ளடக்கிய ரபீசியம் வடிவில் அமைந்த பகுதியாகும். இதை தென்னை முக்கோணம் என்றும் அழைப்பார்கள். இப்பகுதியின் சீதோஷண நிலையும், சூழலும் தென்னைச் செய்கைக்கு ஏற்றதாக இருந்தது.

## பெருந்தோட்ட உற்பத்திக்கான ஊழியம்

### ஊழிய மூலம்

பெருந்தோட்ட உற்பத்திக்குத் தேவையான போதிய அளவு தொழிலாளர்களைக் குறைந்த செலவில் சேர்ப்பதே தோட்டத்துரைமாரின் முக்கிய கவலைகளில் ஒன்றாக இருந்தது. திட்டமிட்ட வகையில் பெருந்தோட்டச் செய்கை அடிப்படையில் முதலாவதாகச் செய்யப்பட்ட பயிர் கோப்பியாகும். இதற்குப் பருவ முறைகளிலேயே வேலையாட்கள் தேவைப்பட்டது. அயலில் இருந்த சாமான்ய சிங்கள மக்கள், சொந்தப் பயிர்ச்செய்கையில் அல்லது வயல்களில், சரக்குகளை ஏற்றிச் செல்லல், கட்டடம் கட்டுதல், காடு வெட்டுதல் போன்ற குறிப்பிடக்கூடிய சுய தொழில்களில் ஈடுபடடிருந்தமையால், கோப்பி அறுவடைக்குத் தேவையான ஆட்தேவைக்கு அவர்களில் நம்பியிருக்க முடியவில்லை.

ஆகவே தோட்டத்துரைமார் கூலியாட்களைத் தேடுவதற்காக மாற்றுவழி ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. குறிப்பிட்ட சூழ்நிலையும் தேவையும் இணைந்து, தென்னிந்தியத் தொழிலாளர்கள் பருவகால அடிப்படையில் இங்கு வந்து கோப்பிப் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கு, வழி வகுத்துக்கொடுத்தது. 1770ம், 1850ம் ஆண்டுக்கும் இடையில் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தின் கொள்கைகளினால் மதராஸ் பிராந்தியத்தில் உள்ள தமிழ் மாவட்டங்களில் விசேஷமாக தஞ்சாவூரில் இருந்த சகல சாமான்ய கிராம மக்கள், நிலச்சுவாந்தர்களிடமும் நகர்ப்புற கடும் வட்டிக்காரரிடமும் மீளமுடியாத கடனில் ஆழ்திருந்தனர். மேலும் இக்காலகட்டத்தில் இப்பிராந்தியங்களில் பஞ்சம், பட்டினி நிலவியது. இது பெரும்பாலும் கிராமத்தில் உள்ள மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும், சாதியினரையுமே அதிகம் பாதித்தது. மேலும் இந்தியாவில் சட்ட ரீதியாக அடிமைத்துவம் ஒழிக்கப்பட்டதனால், முகவர்களுக்கு வறிய நிலமற்ற தொழிலாளர்களை அப்பிராந்தியத்திலிருந்து ஏமாற்றியோ, கடத்தியோ கொண்டு செல்ல வசதியாக இருந்தது. வறுமைக் கோட்டின் கீழிருப்போரில் பெண்களும் முக்கிய தொகுதியாக இருந்தனர். இச்சூழ்நிலைகள் எல்லாம் ஒன்றிணைந்து வகையற்ற, கைவிடப்பட்ட மக்கள் கூட்டத்தை உருவாக்கியது. இப்பேர்ப்பட்டவரிலிருந்து பெருந்தோட்டத்துக்கு ஆட்சேர்ப்பது இலகுவாயிருந்தது.

தென்கிழக்காசியாவில் கிராமிய சமுதாயத்தில் க.ஃப் என்பவர் செய்த ஆய்வுகளிலிருந்து, (தஞ்சாவூரின் தாழ்த்தப்பட்ட சாதியினர் எதிர்நோக்கிய அழுத்தங்கள்) பற்றிய சில பெறுமதியான உள்நோக்குகளை அறியலாம் (தஞ்சாவூர் 1981). இலங்கைப் பெருந்தோட்டத் துறையின் பெரும்பாலான தொழிலாளராக இவர்கள் இருப்பதனால் அவர்கள் புலம்பெயர்ந்தமைக்கு, எத்தகைய தென்னிந்தியச் சூழ்நிலை காரணமாக இருந்ததென்பதை ஆராய்வது இவ்வேளையில் பொருத்தமாக இருக்கும். கும்பப்பேட்டைக் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரில் அனேகமானோர் (பிராமணர் தவிர்ந்த) குறிப்பிடக்கூடிய வகையில் அடிமைப்பட்டிருந்தனர் (1855க்கு முன்னர்). 1861ம் ஆண்டு அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதையடுத்தும் பெருந்தோட்டத்துக்கு தொழிலாளர் தேவைப்பட்டதாலும், இந்தியாவிலிருந்து (1981:193) பாரிய ஆட்புல நகர்வும் பெருந்தோட்டத் தொழிலுக்குத் தோற்றுவாயாக அமைந்தது. இருப்பினும், பெரும்பாலான அடிமையாட்கள் (குறிப்பாக பள்ளர், மூனார் சாதியைச் சார்ந்தவர்கள்) நிலச்சுவாந்தர்களுக்குப் பண்ணையாட்களாக மாறினர். 19ம் நூற்றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அநேகமான பள்ளர்கள் நாட்கூலியாளராக மாறினர். குறிப்பாக இவர்கள் வாய்க்கால் வெட்டுவதற்காகவும், நாற்று நடுவதற்கும், அறுவடை செய்யவும் தேவையான

காலகட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டனர். பெருந்தோட்டங்கள் பெருகியபோது, தொழிலாளர் குழு பெருகியது. இதனால் தற்காலிக வேலையாட்கள் கூட்டம் உருவாகியது. போதுமான அளவு வேலையாட்கள் இலகுவாகக் கிடைத்தமையால், நிலச்சுவாந்தர்களுக்கும், தம்மிடம் பட்ட கடன்களை அடைப்பதற்காக, வேலையாட்கள் தமக்கு மட்டும்தான் வேலை செய்ய வேண்டும் என்ற தேவையும் இருக்கவில்லை. குறிப்பாக, விவசாய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இந்த 'கூலிக்குழுக்கள்' இலங்கையில் தோட்டவேலை செய்வதற்காக ஒரு தொழிலாளர் கூட்டமைப்பாக உருவாகியது. (க.ஃப் 1981:184.195)

மதராஸ் பிராந்தியத்தின் மற்றைய பாகங்களில் இதே போன்று தான் நிகழ்ந்தது. 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஒரு நிலச்சுவாந்தரின் கௌரவம், அவர் வைத்திருக்கும் தொழிலாளரின் எண்ணிக்கையை வைத்தே மதிப்பிடப்பட்டது. 1850ம் ஆண்டிற்குப் பின்னர் பெரும்பாலான (றியோட்) நிலச்சவாந்தர்கள் தங்கள் காணிகளை வசதிபடைத்த கிராமத்தோருக்கும், கடும் வட்டிக்குக் கொடுப்பவருக்கும் குத்தகைக்கு விட்டனர். (குமார் 1965:85; சர்க்கார் 1983:34). இதன் விளைவாக நிலச்சுவாந்தர்களுக்கு தொழிலாளர்கள் குறைவாகவே தேவைப்பட்டனர். அதே வேளையில் பொருளாதாரத்தில் பணப்புழக்கம் பெருகியது. இது வேறுபட்ட பல முதலீடுகளுக்கு வழிவகுத்தது. இச்சந்தர்ப்பத்தில் நிலச்சுவாந்தர்கள் தொழிலாளர் பலரைத் தமக்குக் கீழ் வைத்திருப்பது கௌரவம் எனக் கருதுவதை விடுத்து கல்வி, கைத்தொழில் போன்றவற்றில் முதலீடு செய்வது கூடிய பயன்தருவதாகக் கருதினார்கள். 19ம் நூற்றாண்டுக் கடைசியில், நிலச்சுவாந்தர்கள் நிரந்தர கூலிப்படையை வைத்துக் கொள்வதை விடுத்து விதைப்பு, அறுவடை போன்ற காலகட்டங்களில் தற்காலிக அடிப்படையில் கூலியாட்களை அமர்த்துவது பயன்தரக் கூடியதாகக் கண்டுகொண்டார்கள். இதன் விளைவாக, ஏதேனும் விவசாய அனர்த்தங்கள் நிகழும் வேளைகளில் இந்த நிரந்தரமற்ற கூலியாட்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டனர். நெல்லூர் கலெக்டரின் குறிப்பின்படி (1900).

> ஆரம்பகாலத்தில் நிலச்சுவாந்தர்களும் விவசாயக் கூலியாட்களும் ஒரே தொகுதியாகச் செயற்பட்டனர். தொழிலாளர்கள் மண்ணை நம்பியிருந்தனர். அத்துடன் பருவகாலங்கள் பொய்த்துப் போகும் போதும் நற்பலனளிக்கும்போதும் தமது எஜமானர்களையே சார்ந்திருந்தனர். தற்போது, நிலச்சுவாந்தர்களுக்கு தொழிலாளர்களைப் பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஏக்கமோ ஊக்கமோ இல்லை. அதன் காரணமாக அவர்களுக்குக் கஷ்ட காலங்களில் உதவ வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கவில்லை. அவர் விதைப்புக் காலங்களிலும், அறுவடைக் காலங்களிலும் பெருமளவு கூலியாட்களை அமர்த்தி வேலை பெற்றுக்கொண்டு அதன்பின் அவர்களை நிறுத்திவிடுவார்கள். பருவகாலம் பொய்த்துப் போகுமாயின், முன்பெல்லாம் எஜமானையே நம்பியிருந்த இத்தொழிலாளர்கள், இக்காலகட்டத்தில் வாழ வகையின்றிக் கைவிடப்படுவர் (வெஸ்ஃம்-பெரும 1986:93).

இத்தகையவர்களே (கைவிடப்பட்ட கூலியாட்களும், சிறிய அளவில் விவசாயம் புரியும் தொழிலாளர்களும்) இலங்கைக்குப் புலம்பெயர்ந்து வந்தோரின் எண்ணிக்கையில் பெரும்பங்கை வகித்தனர். புலம்பெயர்ந்தோரில் பெரும்பங்கினர் தஞ்சாவூரிலிருந்து வந்த தாழ்த்தப்பட்ட சாதியினரும், பிராமணரல்லாத குறைந்த சாதியினருமாவர் (க.ஃப் 1981:131). விவசாய அனர்த்தங்கள் நேரும்போது மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாகிய தொழிலாளர்களை முற்பணம் கொடுத்து பெருந்தோட்ட

வேலைக்கமர்த்துவது ஆட்சேர்ப்பாளர்களுக்கு இலகுவாக இருந்தது. ஆரம்ப காலத்தில் இத்தொழிலாளர்கள் நிலச்சுவாந்தர்களிடம் கடன்பட்டிருந்த காரணத்தினால் இடம்பெயர்வது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், வேறு இடங்களில் இத்தொழிலாளருக்கு வேலை கிடைப்பது தமக்கு சாதகமாக இருக்கும் என்று நிலச்சுவாந்தர்கள் கருதும்பட்சத்தில் அவர்களைத் தற்காலிகமாக அந்த வேலைக்குச் செல்ல அனுமதித்தனர். 19ம் நூற்றாண்டின் முடிவில் தொழிலாளர்களின் வேலை, கூடியபாகம் தற்காலிக மயமாக்கப்பட்டமையால் வறுமைக் கோட்டில் இருக்கும் ஒரு பாரிய தொழிலாளர் கூட்டம் உருவாகியது. இதுவே இலங்கையின் பெருந்தோட்டக் கூலிவேலைக்கு முக்கிய ஆள்வளமாகக் கையிருப்பில் அமைந்தது.

## ஆட்சேர்ப்பு முறையும், பெண்களின் தொழிலும்

கங்காணிமுறை அடிப்படையிலேயே ஆட்சேர்ப்புகள் நடைபெற்றன. இவ்வடிப்படையிலே பிரித்தானிய இந்தியாவிலும் சிலோனிலும் வேலைக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர். கிராமங்களில் இருந்து பெருந்தோட்டங்களில் வேலையில் சேர விரும்பும் ஆட்களுக்கு முற்பணம் கொடுப்பதற்காக, ஆட்சேர்ப்பில் ஈடுபடும் கங்காணிமாருக்குத் தோட்டத்துரைமார்கள் வட்டியில்லாக் கடன் கொடுத்தார்கள் (வைற்லி கமிஷன் 1931:355). கிராமங்களில் அனேகமாக உறவினர்களே வேலைக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் ஆணாதிக்கத்துக்குரிய பல மரபுவழக்கு மனப்பான்மைகளும், பெருந்தோட்ட வாழ்க்கை முறைக்கேற்றவாறு சற்று மாற்றியமைத்த முறையில் கொண்டு வரப்பட்டது.

ஆரம்ப காலத்தில் வேலைக்குச் சேர்க்கப்பட்டோரில் பெரும்பான்மையினர் ஆண்களாவர். எனினும், பதிவேடுகளின்படி இக்குழுவினருடன் சிறு விகிதத்தில் பெண்களும் புலம்பெயர்ந்ததாக அறியப்படுகிறது. இப்பெண்கள் சொந்தபந்தமற்றவர்களாக ஆண்களுக்கு சேவைபுரியும் நோக்கில் கொண்டுவரப்பட்டவர்களாக இருக்கலாம். அக்காலகட்டத்தின் மருத்துவப் பதிவேடுகளின்படி ஆண் தொழிலாளரிடையே பாலியல் மூலம் தொற்றும் நோய்களின் நிகழ்வு மிகவும் உயர் மட்டத்தில் இருந்தது. இவர்களுடன் வந்த பெண்கள் தொலைதூரப் பயணத்தினால் ஏற்பட்ட கடும் கஷ்டங்கள், மற்றும் அடிக்கடி ஏற்படும் சுகவீனங்கள் தொற்றுநோய்கள், அதற்கு மேலாக ஆண்களின் பாலியல் பலாத்காரம் என்பவற்றைப் பொறுமையுடன் ஏற்றுத் தாங்கிக் கொள்ள வேண்டி இருந்தது. புலம்பெயர்வின் ஆரம்ப கட்டத்தில் யாழ் அரச அதிபராய் கடமையாற்றிய W.C.டுவைனம் அவர்களின் குறிப்பைக் கொண்டு இப்பெண்கள் அடைந்த இன்னல்களை ஊகித்துக் கொள்ளலாம் . . .

> . . . 1843இலும் 45இலும் அவலநிலைக்குள்ளான கூலிக்கூட்டத்தில், 50 அல்லது 100 ஆண்களுக்கு மூன்று அல்லது இரண்டு பெண்கள் என்ற வீதத்தில், முன்பின் அறியாத நாட்டிற்கு, விபரமறியா மக்களாக, சீர்கேடான உணவு, உடையுடன், கண்ணுக்குத் தென்பட்ட எந்தக் கழிவுகளையும் உண்டு, காட்டுப் பாதைகளில் பயணம் செய்து, சில நேரங்களில் மைல் கணக்கில் ஒரு துளி நீரும் அருந்தாமல் நடந்து சென்று, மற்ற நேரங்களில், சதுப்பு நிலம் சூழவுள்ள பகுதிகளில் முழங்கால் அளவு நீரில் நடந்து சென்று, புதிதாகக் காடு வெட்டப்பட்ட பகுதியிலோ அல்லது தோட்டமமைப்பதற்கு காடு வெட்டியோ, வசதியற்ற இருப்பிடங்கள் கொடுக்கப்பட்டும், அக்கறையற்ற எஜமானரின் கண்காணிப்பில் இவர்கள் வாழ்ந்தனர் . . .

பிற்காலத்தில் போதிய அளவு பெண்களைச் சேர்த்துக்கொள்ள தோட்டத்

துரைமாரும் குடியேற்ற அதிகாரிகளும் முயற்சி எடுத்தனர். இதற்குப் பலகாரணங்கள் இருந்தன. கூடிய பெண்கள் வரும்போது தொழிலாளரும் கூடிய காலம் நிலையாகத் தங்கி வாழ்வர் என்ற எண்ணக் கருத்தே இதற்கு முக்கிய காரணமாகும். இம்முயற்சி ஆட்களைத் திரட்டி கைக்குள் வைத்துக் கொள்ளும் கஷ்டத்தை ஓரளவு நிவர்த்தி செய்யும் என்று இவர்கள் நம்பினர். கடும் கஷ்டமான பயணத்துடன், புதிய சூழ்நிலைக்கு முகம் கொடுத்து, சிரமமான கடும் வேலைத்திட்ட முறையில் வேலையும் செய்வதால் அவர்களிடையே இறப்புவீதம் மிக உயர்மட்டத்தில் இருந்தது. இதன் காரணத்தினால், ஆரம்ப காலத்திலிருந்து உயிர்பிழைத்தோரை வேலையில் வைத்துக் கொள்வதில் தோட்டத்துரைமார் பெரும் ஆர்வம் செலுத்தினர். பெண்கள் வரவழைக்கப்படுவதை ஊக்குவித்தால் வேலையாட்கள் ஊர்திரும்புவதைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதை அவர்கள் உணர்ந்தனர். மேலும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் சொற்ப அளவு பெண்கள் இருந்தால் அது பெரும் கேடு விளைவிக்கும். ஏனெனில், அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பாலியல் தொடர்பால் உண்டாகும் தொற்றுநோய்கள் உண்டாக ஏதுவாகிறது என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். 1869ஆம் ஆண்டிலிருந்தே குடியகல்வு தொழில் கமிஷனின் செயலாளர் இந்தியாவில் உள்ள முகவருக்கு மனைவி, மக்களுடன் வரவிரும்பும் தொழிலாளரையே தேடும்படி விசேஷ ஆணை பிறப்பித்தார்.

பெண்களின் வேதனம் ஆண்களுடையதையும் பார்க்கக் குறைவுள்ளதாக இருந்தமையும் பெண்களை வேலைக்குச் சேர்க்கும் மற்றொரு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியாவில் கட்டிட வேலைகளில் ஈடுபடும் பெண்கள் ஆண்களை விடக் குறைந்த சம்பளம் பெற்றனர். 1859இல் திருநெல்வேலி, மதுரை பகுதிகளில் வேலை செய்த ஒரு ஆண் தொழிலாளர் நாளொன்றுக்கு 3 பென்ஸ் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டார். அதேவேளை ஒரு பெண் நாளொன்றுக்கு 1 பென்ஸ் 3 பாதிங்ஸ் என்ற அடிப்படையில் பெற்றார். இத்தகைய வேற்றுமை யாங்கன் விவகாரத்திலும் நடந்தது. அதாவது மனைவியுடன் வந்த ஆண்களுக்கு கூடிய சம்பளமும் இளைஞருக்குக் குறைந்த சம்பளமும் வழங்கக் கமிஷன் முன்வந்தது.

தாழ்த்தப்பட்ட சாதியையும் வகுப்பையும் சேர்ந்த பெண்கள் இந்திய சமுதாயப் படிமுறை வரிசை நிலையில் கடைசிப் படியில் இருப்பதால் கடுமையான குற்றேவல் வேலைகளை வலிந்து ஏற்றுக்கொள்ள வேண்டியவராய் இருந்தனர். ஆகவே, கடுமையான தோட்ட வேலைகளுக்குத் தம்மை மாற்றியமைத்து நிலையாகவும் ஒழுங்காகவும், இவர்கள் வேலை செய்வார்கள் என்று இந்தியாவில் ஆட்சேர்ப்பு முகவர் கருதியதும், பெண் ஆட்சேர்ப்புக்கு முக்கிய காரணமாக இருந்தது.

இத்தகைய மனப்பான்மையாலும், சொந்த ஊர்களில் அதிகரித்த வறுமையாலும், நிலச்சுவாந்தர் - தொழிலாளர் என்ற தொடர்பு அறுந்து போனதாலும், ஆண் பெண் ஆட்சேர்ப்பு வீதத்தில் மாற்றம் ஏற்பட்டுக் கூடிய பெண்கள் ஆண்களுடன் புலம்பெயர்ந்தனர். 1843இல் மொத்த தொழிலாளர் எண்ணிக்கையில் 2.6 வீதம் பெண்கள் (பிள்ளைத் தொழிலாளரைத் தவிர்த்து) இருந்தனர். 1866இல் இந்த வீதம் 26.87 ஆக அதிகரித்தமை இக்கூற்றை உறுதிப்படுத்தியது. 1843 - 1877 இடையே புலம்பெயர்ந்தோரில் பெண்கள் ஐந்தில் ஒரு பங்கை வகித்தனர். 56,000 ஆண்களும் 10,300 பெண்களும் 8,000 பிள்ளைகளும் இலங்கைக்கு வருகை தந்ததாக மதிப்பிடப்பட்டது. இந்தியாவிற்குத் திரும்புவோரின் எண்ணிக்கை வீதமும் இதே அடிப்படையில் இருந்தது. தேயிலைச் செய்கை விருத்தியடைந்தமையால் தொழிலாளர் தேவை அதிகரித்தது. அதிலும் விசேஷமாக மேலதிகப் பெண்கள் தேவைப்பட்டனர். இதுவே பெண்தொழிலாளரின் விகிதம் மேலும் அதிகரிக்கக்

காரணமாயிற்று. 1911ம் ஆண்டளவில் பெண் தொழிலாளர் ஆண் தொழிலாளருக்கு சமமான எண்ணிக்கையில் இருந்தனர்.

பெருந்தோட்டச் சனத்தொகையில் பெண்கள் பெரும்பங்கை வகித்தபோதும், தொழிலாளர் புலம்பெயர்வு சுழற்சியின்போது இப்பெண்கள் சிறு பங்காகவே இருந்தனர். 1917ஆம் ஆண்டு அறிக்கையின்படி 62 வருட கால எல்லைக்குள் வருகைகளைக் கணக்கில் கொள்ளும்போது, 73.45% ஆண்களும், 16.75% பெண்களும், 9.8% சிறுவர்களும் இருந்தனர். அதேவேளை, 1911ஆம் தமிழ் தோட்டத் தொழிலாளரின் எண்ணிக்கை 234, 594 ஆண்களாகவும், 205, 708 பெண்களாகவும் இருந்தது. இதிலிருந்து, ஆண்கள் அடிக்கடி சொந்த ஊருக்குப் போய்வரும்போது பெண்கள் கூடிய பாகம் இத்தீவிலே தங்கினர் என்பது தெரிய வருகிறது. (மாஜோரிபாங்ஸ் அன்ட் மரக்காபர் 1917:2 - 3).

## ஆணாதிக்கமுறையடிப்படையில் தொழில்முகாமைத்துவமும் தொழில்கட்டுப்பாடும்

தொழிலாளர் ஒரு தெளிவான வேற்றுமையின் அடிப்படையிலும் படிமுறை வரிசை நிலையின் அடிப்படையிலும் வேலைக்கமர்த்தப்பட்டனர். இது வர்ணம், ஜாதி, இனம், பால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இத்தகைய பிரமிட் அமைப்பு படிமுறையில் ஒவ்வொருவரின் தொடர்பும் மிகவும் மரியாதையுடனும் மிகவும் சொற்ப அளவிலும் இருந்தது. இதன் மொத்தமான நோக்கம் என்னவெனில், தொழிலாளரின் மீது, கூடிய அளவு கட்டுப்பாடு விதித்தலும் அதிகாரத்திலுள்ளோருக்கு மரியாதை செலுத்துதலுமாகும். பிரமிட் படியில் பெண்கள் அடித்தளத்தில் இருந்தார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் மேல் ஆணாதிக்கம் செலுத்தப்பட்டது.

ஒவ்வொரு பெருந்தோட்டமும் தத்தமக்கென எல்லைக் கோடுகள் வகுத்துக் கடுமையான படிமுறை நிலையினைக் கடைப்பிடித்தனர். முகாமைத்துவத்துக்குத் தலைமை வகுப்பவர் பெரிய துரை என அழைக்கப்படும் வெள்ளை இனப் பிரித்தானியராவர். இவர் அடிமைகளை அடக்கி வாழும் நிலப் பண்ணை முறைகளுக்கு ஒப்ப தோட்டம் முழுவதையும் ஆண்டார். அவருடைய வாக்குத் தோட்டத்துக்குள் கேள்வி எழுப்பப்படாது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய சட்டமாகும். சடங்கு முறைகளாலும், நடத்தையாலும் ஒவ்வொரு படிமுறை நிலையிலுள்ளவரும் இவருடைய பூரண ஆதிக்கத்தை ஏற்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். தொழிலாளர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவரது முகத்தை நேர்நோக்கலாகாது; வழியில் அவரைச் சந்தித்தால் பாதையில் இருந்து விலகிக் கொள்ளல் வேண்டும்; பெரியதுரைக்கும் தொழிலாளருக்கும் இடையே நேரடியான பேச்சு வார்த்தை வைத்தல் ஆகாது; அவரது முன்னிலையில் ஆண்கள் மடித்துக் கட்டிய சாரன்களைத் தாழ்த்த வேண்டும். இவர்களிடையே சமூக, அரசியல் இடைவெளி குறைந்துவிடும் என்பதால் அவர் வரும்போது குடை பிடிக்கவோ அந்தஸ்தை உயர்த்தும் வகையான உடையணியவோ கூடாது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுடைய வீடமைப்புமுறையிலும் சுகபோகங்களிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. பெரியதுரையின் மாளிகை இயற்கைக் காட்சியை நோக்கியவாறு சுற்றிவர வனப்பு மிக்க மலர்த் தோட்டங்களுடனும் அமைந்தது. அதற்கு மாறாகத் தொழிலாளரின் இருப்பிடமோ நீர் வசதியற்ற, சுகாதாரமற்ற ஒரு கூடாரமாக இருந்தது.

பெரியதுரைக்கு அடுத்தபடியாக சின்னத்துரைகள் இருந்தனர். பொதுவாக, ஐரோப்பியரின் உதவியாளர்களுக்கு வீடு, பணியாளர், சேதாரப் பொருளுரிமை

போன்ற தாராளமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆனாலும், அவை பெரிய துரையின் ஒய்யார வாழ்க்கை முறையை விடச் சற்றுக் குறைவாகவே இருந்தன. சின்னத்துரைக்கு அடுத்தபடியாக உயர் பணியாளர்களான கணக்குப்பிள்ளை மற்றும் காரியாலய அலுவலர்களும் அடங்குவர். இவர்கள் தமிழ் பேசுவோராயிருந்தாலும், இவர்களுடைய பின்னணிச் சூழல் தொழிலாளருடையதைப் போன்றதல்ல. அநேகமானோர் தீவின் வடக்கு அல்லது கிழக்கைச் சேர்ந்தவராவர். 'த ஸ்டா.'.ப்' என்ற குறிப்புப்படி, அவர்கள் 'குவாட்டர்ஸ்'களில் வாழ்ந்தனர். இவைகள் தொழிலாளரின் லைன்களை விடச் சிறந்ததாக இருந்தது. ஆனாலும், துரைமாருடைய வீடுகளைவிடக் குறிப்பிடத்தக்களவு வசதியில் குறைந்தவையாக இருந்தன. இந்த உயர் பணியாளர்கள் சம்பளம் வழங்குதல், நிறையை அளவிடுதல், உற்பத்தி நடவடிக்கைகள் போன்றவற்றைக் கவனித்தார்கள். அவர்கள் தோட்ட நிறுவனங்களின் மரபொழுங்குக்கு அமைய மிகுந்த அகந்தையுடன் தொழிலாளரை மரியாதைக் குறைவாக நடத்தினர்.

எண்ணிக்கையிற் கூடியவரும், படிமுறைநிலையில் கடைசி மட்டத்திலும் இருக்கும் இந்தத் தொழிலாளர் கூட்டத்துக்கு, அவர்களுடைய விசுவாசத்திற்கோ, உடலுழைப்பிற்கோ ஏற்ற வெகுமதி கிடைக்கவில்லை. தொழிலாளர் கூட்டத்திடையே கூட சாதி அடிப்படையில் ஒரு தெளிவான படிமுறைநிலை இருந்தது. பெருந்தோட்டத்தில் வேலைபார்ப்போரும் கூடத் தத்தமது தலைமையின் கீழோ அல்லது சில்லறைக் கங்காணிகளுக்குக் கீழோ சிறுசிறு குழுக்களாகப் பிரிந்திருந்தனர்; இச்சிறு குழுக்கள் சாதி அடிப்படையில் ஒரே வகையைச் சார்ந்தவர்களாக இருந்தனர். சகல தொழிலாளர் கூட்டங்களின் பிரிவுகளும் 'குடும்ப ஒழுக்கமுறை'யை மேம்படுத்தும் முறையில் அமைந்திருந்தன. அதாவது ஒவ்வொரு படியிலும் அதிகாரத்திலுள்ள ஒரு ஆண், தனக்குக் கீழுள்ளோர் மேல் தன் உரிமையைக் காட்டியும், தனக்கு மேற்படி வரிசையில் உள்ளோருக்கு மரியாதை கொடுத்தும் வந்தார். இத்தகைய முறைமைகள் 'திருப்தியான விளைவை' கொடுப்பதாக அமைந்தன. இதனால் தோட்டத்தில் தொழிலாளரை நிலையாகத் தக்கி வைக்க முடிந்தது. (சிலோன் லேபர் கமிஷன் கைநூல் 1935:2). பொதுவாகத் தலைமைக் கங்காணிதான் படிவரிசையில் உயர்ந்த இடத்தில் இருந்தார். தொழிலாளர் கூட்டம் வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, சில்லறைக் கங்காணியின் அதிகாரத்தின் கீழ் இருந்தனர். சில்லறைக் கங்காணி தன் குழுவின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்தார். அத்துடன் இவர் தலைமைக் கங்காணியின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட்டார். சில்லறைக் கங்காணிகள், ஒரே பரம்பரையில் வந்தவர்களாகவோ அல்லது ஒரே சாதியைச் சார்ந்தவர்களாகவோ அமைந்தனர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. (ஜெய ராமன் 1975 : 20). சாதி வேறுபாடுகள் தோட்ட முகாமைத்துவத்தால் மதிக்கப்பட்டன. ஆரம்ப காலங்களில் தலைமைக் கங்காணியின் அங்கீகரிப்புடன் சாதிக்கேற்றவாறு வீடுகள் கொடுக்கப்பட்டன. (உதாரணமாகச் சில சாதியினர் ஒன்றாக வாழ்வதில்லை. சில சாதியினர் ஒருவருக்கொருவர் முகம் கொடுப்பதில்லை) (சூரியன் 1982b). பெருந்தோட்ட உற்பத்தித்துறையின் கட்டமைப்புக்குள், இத்தகைய சிறப்புக் கூறுகள், பிரமிட் அமைப்பின் அடிமட்டத்தில் உள்ள தொழிலாளர்களை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அடிகோலியதாக உணரப்பட்டது.

தோட்டப் படிமுறை வரிசையில் பெண் தொழிலாளர்கள் அடிமட்டப் படியில் இருந்தார்கள். வகுப்பு, சமூக, பால் ரீதியான அடக்குமுறைகளின் படுமோசமான பாதிப்புகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவர்களே,

தொழிலாளர் குழுக்களில் மிகவும் குறைந்த சம்பளம் பெற்றுக் கொண்டவர்கள். சாதி அடக்குமுறையின் எதிர்மறையான விளைவுகளை இவர்கள் அனுபவித்தார்கள். சமூகத்திலும், வேலைசெய்யும் இடங்களிலும் மரபுவழிவந்த ஆண் ஆதிக்கத்துக்கு அடிபணிந்தார்கள். மரபுரிமையாக வந்த சாதி அடிப்படையிலான ஆணாதிக்கத்தின் முனைப்பான தாக்குதலை அநேகமான பெண்கள் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. (புலம்பெயர்ந்த குழுக்களால் இம்முறை பாதுகாக்கப்பட்டு, அவர்களின் வாரிசுகளாலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தியாவின் மரபுரீதியான சூழலில் கூட இவை சற்றுத் தளர்ந்த விதத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டன).

## தொழில் விரிவுபடுத்தும் முறைகள்

தோட்டங்களில், பெண் தொழிலாளரின் அதிகரிப்போடு, பால்ரீதியான தொழிற் பிரிவுகளும் உண்டாயின. பெண்கள் எனப்படுபவர் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்குமே பொருத்தமானவர்கள் என்று கூறப்படும். "தேசியக்" கொள்கைகளின் அடிப்படையிலேயே இவைகள் ஏற்பட்டன. இதன்படி பெண்களால் செய்யப்பட்ட தொழில்கள், ஆண் மேற்பார்வையின்கீழ், கடுமையானதாகவும், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டியதாகவும், நேரத்தை உறிஞ்சும் தன்மை கொண்டதாகவும் இருந்தது. பெண்கள் ஆரம்ப காலங்களில் இருந்தே பிள்ளைகளுக்கும் வீட்டில் உள்ளோருக்கும் தேவையான உணவு தயாரிப்பவர்கள் என்பதால், "பொறுமையானவர்", ஆண்களின் வழிநடத்தலுடன், விரல்களால் வேலைசெய்வதற்கு (சுறுசுறுப்பான விரல்கள்) உபயோகமானவர் எனக் கருதப்பட்டது. பெண் தொழிலாளருடைய விஷேட தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு இது "இயற்கை"யாக ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய பிரிவுமுறை "இயற்கை"யாகவே கைவரும் வேலை என்பதால் அதற்கு "குறைந்த மதிப்பு" அளிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் பெண்கள் செய்த வேலைக்கு ஆண்களை விடக் குறைவான வேதனம் வழங்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில், பெண்கள் கடுமையான கொழுந்து பறிக்கும் தொழிலுக்காகப் பத்துத் தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டனர். சில பெண்கள் களை பிடுங்கும் தொழிலிலும் தொழிற்சாலையில் அரிக்கும் வேலையிலும் ஈடுபட்டனர். இருப்பினும், கொழுந்துபறித்தல், அது தொடர்புள்ள வேலைகள் செய்தல் மற்றும் கொய்த கொழுந்துகளைக் கொட்டுதல் என்ற சுற்று எல்லைக்குள்ளேயே பெண்களின் முக்கிய வேலை அடங்கியது. இறப்பர் தோட்டங்களில் இறப்பர் பால் சேகரிக்கும் பெண்கள் முக்கியமாகினர். தென்னந் தோட்டங்களில் சில பெண்கள் வேலை செய்தனர். ஆனால் இங்கே இவர்களது வேலை களை பிடுங்குவதோடு கட்டுப்படுத்தப்பட்டது.

கொழுந்து பறிக்கும் பெண்களின் அன்றாட வேலை சூரியோதயம் ஆரம்பிப்பதற்கு வெகுநேரத்துக்கு முன்னரே தொடங்கிவிடும். கொழுந்து பறிப்பவர்கள் காலை 4.00 மணிக்கே எழுந்து நீர் சுமந்து வரப்புறப்பட்டு விடுவார்கள். (அநேக தோட்டங்களில், நீர் பெறுவதற்கு தொலை தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கும். அதன்பின்பு வீட்டை ஒழுங்குபடுத்தி, உணவு தயாரிப்பதில் ஈடுபடுவார்கள் (நெருக்கடியான கால அவகாசத்துக்குள் தொழில் செய்ய வேண்டும் என்பதால் பெண்கள் காலையிலேயே மதிய உணவையும் தயாரித்து விடுவார்கள்). முதலில் குடும்பத்தினருக்கு ஆண்களுக்கு உணவு பரிமாறி அதன்பின் பிள்ளைகளுக்குப் பெண்கள் உணவு பரிமாறுவார்கள். அதன் பின்னரே தாம் உணவை உண்டு, லைன் அறைகளைத் துப்புரவு செய்வார்கள். பின்பு

வீட்டிலிருக்கும் குழந்தைகளை 'குழந்தை பராமரிப்பு நிலையத்தில்' கொண்டு போய் விடுவார்கள் அல்லது அக்குழந்தைகளை வீட்டிலிருக்கும் வயதில் மூத்த சிறுமியரின் பராமரிப்பில் விட்டுச் செல்வார்கள். காலை 5 மணிக்கு வேலைக்குப் பதிவதற்கு முன்பாக இத்தனை கருமங்களையும் அவர்கள் செய்து முடிக்க வேண்டி இருந்தது. அவள் நேரத்தின் நெருக்கடி காரணமாக இத்தனை கருமங்களில் சிலவற்றைச் செய்யாமலோ அல்லது அரையும் குறையுமாகவோ செய்து முடித்தாள் என்பது தெளிவு.

ஒரு பெண் அன்றாட வேலைக்குப் பதிவு செய்யும்போது அவள் இன்ன களத்தில் வேலை செய்ய வேண்டும் எனப் பணிக்கப்படுகிறாள். சந்தர்ப்பம் காரணமாக வேலைக்கு சிறிது பிந்திவிட்டால், (சில நேரங்களில் சில நிமிஷங்களால்) அவளுக்கு அடுத்த நாள் வரையில் வேலை கிடையாது. அவள் கங்காணியால் அல்லது களத்து அதிகாரியால் 'துரத்தியடிக்கப்படுவாள்' இச்சந்தர்ப்பத்தில் அந்த நாளுக்கு அவளுக்குச் சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஒரு பெண் தாய்மையுறும் காலங்களில் இத்தகைய மனப்பான்மை சற்றுத் தளர்த்தப்படும். இச்சந்தர்ப்பத்தில் நாள் முடியும் வேளையில் கூடிய நேரம் வேலை செய்து பிந்தி வந்த நேரத்தை சீர்செய்ய அனுமதி வழங்கப்படும்.

வேலைக்குப் பதிவு செய்யும் கூடத்தில் இருந்து கூடையை எடுத்துக்கொண்டு ஒரு பெண், தான் வேலை செய்யும் இடத்துக்குப் போவாள். பெரிய தோட்டங்கள், பல மைல்களைக் கொண்டதாக அமைந்ததால் நெடுந்தூரத்தில் அமைந்த அவ்விடத்தை அடைவதற்கு நியாயமான நேரம் பிடிக்கும். களத்தை அடைந்ததும் மதியம் 12 மணி வரையில் பெண்கள் தொடர்ச்சியாக கொழுந்து பறிப்பார்கள்.

மதியவேளையில் நிறையை அளக்கும் கூடத்துக்கு அவள் நடந்து செல்வாள். அங்கே தன்னுடைய பொதியைப் பதிவுசெய்யும் வரையில் காத்து நிற்பாள். அதன் பின்னரே அவளுக்குக் களத்து வேலையிலிருந்து விடுதலை கிடைக்கும். பின்பு தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு லைனுக்குத் திரும்புவாள். தன் குடும்பத்துக்கான மதிய உணவைத் தயாரிப்பாள், அவற்றை ஆண்களுக்குப் பரிமாறிய பின் சிறுபிள்ளைகளுக்கு உணவூட்டுவாள். அதன் பின் அநேகவேளையில குழந்தைக்குப் பாலூட்டியவாறே அவள் உணவருந்துவாள். மிகுதிநேரம் இருக்கும் பட்சத்தில், பாத்திரங்களைக் கழுவி, வீட்டையும் சுத்தப்படுத்தி மறுபடியும் வேலைக்குப் புறப்படுவாள். போகும் வழியில் 'குழந்தை பராமரிப்பு' நிலையத்தில் சிறுபிள்ளைகளையும் குழந்தையையும் விட்டு, மதியம் 1 மணியளவில் களவேலைக்குத் திரும்புவாள். மதியவேளையில் வீட்டுக்குச் செல்லும் தொழிலாளர் மறுபடியும் வேலைக்குத் திரும்பத் தயங்குவார்களோ என்ற பயங்காரணமாக, அநேக சந்தர்ப்பங்களில், தோட்டத்துரைமார் தொழிலாளருக்கு மதிய இடைவேளை விடுவதற்குத் தயங்கினார்கள்.

காலையில் செய்யப்பட்ட கொழுந்து பறிக்கும் வேலையே மத்தியானமும் கவனிக்கப்பட்டது. கொழுந்து பறித்தலில் ஏதாயினும் முறைகேடு (முற்றிய இலைகளைப் பறித்துக் கூடையில் நழுவவிடுதல்) நடந்தால், அக்கொழுந்து பறிப்பவரை கங்காணி 'இழிந்துரை' செய்து அவளது கவலையீனம் பற்றிக் கண்டிப்பார். இவ்விஷயம் மேலிடத்துக்குச் செல்லும்பட்சத்தில் அவள் வீட்டுக்கு அனுப்பப்படுவாள். பெரும்பாலான சமயங்களில், அவள் கடுமையாகக் கண்டிக்கப்படுவாள் அல்லது ஏதாவது ஓர் வகையில் அபராதம் விதிக்கப்படுவாள். முற்றிய இலைகள் இருந்து, அவை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அதை கவனிக்கத் தவறிய மேற்பார்வையாளர் தண்டனை அடைய நேரிடும். இதன் காரணமாக

அவர்கள் (குறிப்பாக ஆண்கள்) இவ்விஷயத்தில் மிகுந்த கவனத்துடன் இருந்தார்கள். இத்தகைய கண்டிப்பான மேற்பார்வையே கொழுந்துபறிப்போரை நல்ல இலைகளைக் கொண்டு தருவதற்கு கட்டாயப்படுத்தியது என்று பெரும்பாலும் கருத்துரைக்கப்பட்டது. பறிப்பதற்குக் கொழுந்துகள் சாதாரணமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் நாட்களில் சாயந்தரம் 4 மணிக்கு வேலை முடிவதுண்டு. கொய்வதற்கு கொழுந்துகள் நிறைந்து காணப்படும் நாட்களில் பெண்கள் கொழுந்து பறிப்பதற்கு நீண்ட நேரமெடுக்கும். சில வேளைகளில் சாயந்தரம் 5.30 வரை கூட வேலை செய்வார்கள். அதன் பின்னர் அவர்கள் கொழுந்துகளை, நிறை அளக்கும் கூடத்துக்கு அல்லது நிறை அளக்கும் பொது இடத்துக்கு நிறையை அளவிடுவதற்காகச் சுமந்து செல்வர். பதிவு செய்த நிறைகள் துண்டுகளிலும் செக்றோல் ஏடுகளிலும் குறித்து வைக்கப்படும். அதன் பின்னர் பெண்கள் தத்தமது வீடுகளுக்குப் புறப்படுவார்கள்.

ஒரு நாளுக்கு இரு தடவையாவது நிறை அளத்தல் நடைபெற்றது. 'வேலை செய்யும் நேரம்' முடிவடைந்த பின்பே அது செய்யப்பட்டது. அதாவது கொழுந்து பறிக்கும் களத்தில் வேலை செய்வதற்குரிய நேரம் கழிந்த பின்னரே இது நடைபெற்றது. நிறுப்பதற்காக ஒரு பகுதி இருந்தது. (சில வேளைகளில் அவை கொழுந்து பறிக்கும் களத்துக்கு அருகாமையில் இருந்தது; ஆனால் பெரும்பாலும் அவை வெகு தொலைவிலேயே அமைந்திருந்தது.) இவ்விடத்துக்கு இப்பெண்கள் தமது தேயிலைக் கூடைகளை சுமந்து செல்லல் வேண்டும். நாளுக்கு மூன்று வேளை நிறுப்பதாயின் முதலாவது காலை 9 மணிக்கும் இரண்டாவது மதியம் 12 மணிக்கும் மூன்றாவது மாலை 4 மணிக்கும் நிறுக்கப்படும். நிறையெடுக்கும் கூடத்தில் பெண்கள் கியூ வரிசையில் நின்று தமது கூடைகளில் இருக்கும் முற்றிய இலைகளைத் தெரிந்தெடுப்பதிலும் தவறுதலாக விழுந்த குச்சிகளைக் களைவதிலும் தமது நேரத்தைச் செலவிடுவார்கள். அது முடிந்ததும் இலைகள் நிறுக்கப்பட்டு, அதற்குப் பொறுப்பான அதிகாரியால் நிறுவை பதியப்படும். சாதாரணமாகக் கூடையின் நிறைக்காக 1 கிலோகிராம், கணிக்கும் நிறையிலிருந்து கழிக்கப்படும். முன்பு குறிக்கப்பட்ட நிறையுடன் கடைசியில் கணிக்கப்பட்ட நிறையும் ஒரு துண்டில் குறிக்கப்படும். இத்துண்டு பெண்ணின் ஜாக்கட்டில் குத்தப்படும் அல்லது கூடையினுள் இடப்படும்.

சில சந்தர்ப்பங்களில், பாலூட்டும் தாய்மாருக்கு, குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காக முதலாவது நிறுவை எடுக்கும் நேரத்தின்பின் இடைவேளை விடப்படும். இத்தகைய தேவைகளுக்காக, சாதாரணமாக 1 மணிநேரம் ஒதுக்கித் தரப்படுகிறது. ஆனால் பாலூட்டும் நேரத்தை அங்கீகரிக்காத தோட்டங்களும் இருக்கின்றன. பெண்கள் வேலையை முடித்துக்கொண்டு குழந்தை பராமரிப்பு நிலையத்துக்குச் செல்வர் (அருகில் இருந்தால்) அல்லது யாராவது ஒரு பெரிய பிள்ளை, குழந்தையை அங்கு தூக்கிக்கொண்டு வருவாள். தாய் பாதையினருகில் உட்கார்ந்து குழந்தைக்குப் பாலூட்டுவாள். அது முடிந்தவுடன் அவள், கொழுந்து பறிப்பதற்காகத் திரும்பிவிடுவாள். இறுதிக் கட்ட நிறுவை முடிவடைந்ததும் பொறுப்பதிகாரி அவளுடைய எல்லாப் பதிவுத் துண்டுகளையும் பெற்றுக்கொண்டு தேயிலையின் மொத்த நிறையை செக்-றோல் இடாப்பில் பதிந்து கொள்வார்.

பெண்கள் வீடு திரும்பியதும் (வழியில் பிள்ளைகளையும் திரும்ப அழைத்துக்கொண்டு) உடனடியாக பல ரக வீட்டு வேலைகளில் இறங்கிவிடுவர். இரவுப் போஜனத்துக்குத் தேவையான விறகு மற்றும் நீர் போன்றவற்றைக் கொண்டுவருவர். (சில வேளைகளில் ஆண்களும், பிள்ளைகளும் விறகு கொண்டு

வருவதில் உதவிசெய்வர்). பின்னர் அவர்கள் பிள்ளைகளை நீராட்டி தாமும் உடைகளை மாற்றிச் சுத்தம் செய்து கொள்வர். அதன் பின்னர் மதியம் பாத்திரங்களைச் சுத்தப்படுத்தாமல் விட்டுச் சென்றிருந்தால், அப்பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்து சமைப்பதில் இறங்கிவிடுவார்கள். பின்னர் வழமைபோல் தங்கள் புருஷனுக்கும் குடும்பத்திலிருக்கும் ஆண்களுக்கும் உணவு பரிமாறி, அதன்பின் பிள்ளைகளுக்கு உணவூட்டுவார்கள். இத்தனை பணிகளையும் முடித்த பின்னரே பெண்களுக்கு உட்கார்ந்து தமது உணவை உண்பதற்கு நேரம் கிடைக்கும். அவர்கள் அதன் பின்னர் பிள்ளைகள் உறங்குவதற்கு ஆயத்தம் செய்வர்.

தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்ணுடைய அன்றாட வாழ்க்கை முறையில் மிகச் சிறிய அளவிலேயே மாற்றம் இருந்தது. அன்று மழை நாளாக இருந்தாலும் வெயில் எறிக்கும் நாளாக இருந்தாலும், அவள் நாளாந்த வேலையை அதே ஒழுங்குமாறாமல், செய்தே முடிக்க வேண்டும். ஒரு நாள் வேலை நேரத்தின் நீடிப்பு பறியலின் தன்மைக்கேற்ப சற்று மாற்றமடையும் (கொழுந்துகள் நிறைந்து காணப்பட்டால் அவள் காலை 6 மணியிலிருந்து மாலை 5.30 வரை களத்தில் வேலை செய்ய வேண்டும்). ஆனால் எது எப்படி இருந்தாலும், இதனுடன் மேற்கூறப்பட்ட சகல வீட்டுப் பணிகளையும் செய்து முடிக்கும் பொறுப்பை அவள் ஏற்றே ஆகவேண்டும். இத்தகைய வாழ்க்கை ஒழுங்குமுறைக்கு அப்பாற்பட்டவர்கள் மிகச் சிலரே.

## வீட்டு வேலைகள்

தோட்டங்களில் வீட்டு வேலை எனக் குறிப்பிடப்படும் விடயத்தின் முக்கிய அம்சம் தோட்டத்தைப் பொறுத்தவரை வேலைப் பகிர்வு என்பதாகும். இங்கே பெண்ணின் பங்கு சமையல் செய்தல், சுத்தஞ் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல் என்பன. பொதுவாகக் கூறுவதானால், கணவனையும் குழந்தைகளையும் கவனித்தலும் பேணுதலும் ஆகும். இவற்றில் ஆண்கள் பெண்களுக்கு உதவுதல் என்பது கிடையாது.

தோட்டங்களைப் பொறுத்தவரை பெண்கள் நாள் முழுவதும் தோட்டத்தில் வேலை செய்தாலுங் கூட, வீட்டில் அவர்களுடைய வேலைகள் எப்பொழுதும் இருக்கத்தான் செய்தன. உண்மையில் அவை அதிகரித்துக் கொண்டு போவதைக் காணலாம். உற்பத்தி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலுங்கூட, பாரம்பரிய முறைகள் பின்பற்றப்படுவது சாத்தியமற்றதாகக் காணப்பட்ட சில நேரங்களைத் தவிர, வீட்டில் பெண்கள் செய்யும் வேலைகளில் அவை எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

பெண்தோட்டத் தொழிலாளர்களது வீட்டு வேலைகளின் தன்மை பற்றிக் கூறும்பொழுது பல விடயங்கள் வலியுறுத்திக் கூறப்பட வேண்டும். முதலாவது கொழுந்து கொய்பவராகவோ, இறப்பர் பால் சேகரிப்பவராகவோ அல்லது தென்னந் தோட்டங்களில் வேலை செய்யும் அமையத் தொழிலாளராக இருந்தாலென்ன, அவர்கள் பெண்கள் என்ற முறையில் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. இங்குள்ள ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால் அவர்களது வேலையின் தன்மையைப் பொறுத்தும் அவர்கள் தோட்டத்தில் செலவிடும் நேரத்தைப் பொறுத்தும் அவர்கள் வீட்டு வேலைக்குச் செலவிடும் நேரம் அமையும்.

இரண்டாவதாக ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யும் தன்மையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். மூன்றாவதாக அவர்கள் வீட்டு வேலைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவதால் அவை முடிவற்றவை என அவர்கள் உணருகின்றனர்.

நான்காவதாக தோட்டத்து வேலையிலும் வீட்டு வேலையிலும் நாள் முழுவதும் ஈடுபடுவதால் சமூகத் தொடர்பு வெளியுலகத் தொடர்பு என்பன அவர்களுக்கு கிட்டும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதனால், அவர்கள் தம்மைச் சூழவுள்ள விடயங்கள் பற்றிய கருத்துப் பதிவை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக் குறைந்து விடுகிறது. இறுதியாக காலையில் எழுந்த நேரம் தொடங்கி இரவில் படுக்கைக்குப் போகும் நேரம் வரை தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய நிலையில் பெண்ணை வைத்திருக்கின்றன. இது சராசரியாக நண்பகலுடன் தனது வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் ஆணுடைய வேலை நிலையுடன் ஒப்பிடுகையில் நேர்மாறாக அமைந்துவிடுகிறது.

தோட்ட நிர்வாகம் அல்லது தோட்டச் சமூகம் இந்த இரட்டை வேலைப் பழு அல்லது பன்மடங்கு கூடிய பழுவை நியாயப் படுத்துவதற்குப் பல்வேறு காரணிகள் உண்டு. முதலாவதாக வீட்டு வேலைகளைப் பெண்கள் செய்வது என்பது வேலையாகக் கணிக்கப்படுவதில்லை. அது பெண்ணுக்கு இயற்கையாக விதிக்கப்பட்ட கடமையாகக் கருதப்படுகிறது. இது வழமையானதொன்றாகக் கருதப்படுவதால் இது பெண்மீது சுமத்தப்படும் மேலதிகப் பழுவாகக் கருதப்படுவதில்லை. இரண்டாவதாகக் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபொழுது அதைத் தாங்கிக் கொள்ளும் பாரிய பொறுப்பு பெண்மீது சுமத்தப்படுகிறது. வீட்டில் பெண்கள் ஆற்றும் வேலைகள் குடும்ப வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியை ஓரளவு தாங்குகின்றன. இறுதியாக ஆண்களுக்கும் குழந்தைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுவதால் உணவின் சிறந்த பகுதியும் பெரும் பகுதியும் அவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. எஞ்சிய பகுதியே பெண்களுக்குக் கிடைக்கிறது. அதனால் அவர்களது உடல்நலம் ஊட்டக் குறைவினால் பாதிப்படைகிறது. இவ்விதம் குடும்பப் பொருளாதாரத்தில் ஏற்படும் வீழ்ச்சி பெண்களைப் பாதிக்கின்றது. இவ்விதம் குடும்பத்தின் பொருளாதாரச் சுமையைத் தாங்கப் பெண்கள் சகித்துக் கொள்ளும் துன்பங்களை எவரும் கண்டு கொள்வதில்லை. ஏனெனில், சமூகம் குடும்பத்தில் பெண் செய்யும் வேலைகளை வேலையாகவே கணிப்பதில்லை.

வீட்டின் வேலைப் பழு தோட்டத்து வேலை என்பன பெண்ணைப் பெருமளவில் கட்டுப்படுத்தி வைத்துள்ள நிலையே காணப்படுகிறது. இதன் மூலம் தோட்டத் தொழிலாளரான பெண்களைச் சமூகம் எவ்விதம் அடக்கி ஓரங்கட்டுகிறது என்பதை எடுத்துக் காட்டலாம்.

## வருமானம், செலவுகள், கடன்படும் நிலை

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாகத் தோட்டத் தொழிலாளரின் சம்பளங்களை ஒழுங்குபடுத்துவதற்குச் சில முயற்சிகளை அரசாங்கம் எடுத்தது. தொழிலாளரது சம்பளங்கள் தோட்டத்துக்குத் தோட்டம் குறிப்பிடக் கூடிய அளவில் வேறுபடுவதோடு மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றன. அத்துடன் பெண்களுடைய சம்பளம் ஆண்களுடைய சம்பளத்திலும் பார்க்க மிகவும் குறைவாகவும், அவர்களுக்கு வழங்கப்படும் பங்கீட்டுப் பொருட்களும் குறைவாகவே இருக்கின்றன. குறைந்த சம்பளம், குறைந்த அளவான பங்கீட்டுப் பொருட்கள் கடினமான வேலை முறைகள் என்பன குடும்ப அமைப்பில் பெண்களை ஆண்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையையும் கீழ்ப்படிந்து வாழ வேண்டிய நிலையையும் உருவாக்குகின்றது. இவை ஆணாதிக்கத்தையும் பெண்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கின்ற நிலையையும் உறுதிப்படுத்துகின்றன.

1830 - 40 களில் கோப்பிப் பயிர்செய்கையின் ஆரம்ப காலத்தில் 10 இலிருந்து 11 மணி நேர வேலை கொண்ட 1 நாள் வேலைக்கு 4 இல் இருந்து 9 பென்ஸ் வரை சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. 1860 களில் இது 10 பென்சாக உயர்ந்தது (ஜயவர்த்தன 1972:20). அக்கால கட்டத்தில் சம்பளம் பணமாகவும் பண்டமாகவும் வழங்கப்பட்டது. அனேக தோட்டங்கள் அரிசியைக் கொடுத்து அதன் விலையை அவர்களது சம்பளத்தில் கழித்துக் கொண்டன. அக்காலத்தில் அரிசியின் விலை இடத்திற்கிடம் வேறுபட்டிருந்தது. சந்தை விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் தோட்டங்கள் தொழிலாளர்களுக்கு அரிசியை வழங்கின. தொழிலாளருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை சராசரியாக ஒரே தொகையாகக் குறிப்பிட இயலாதிருந்தது.

அக்காலத் தோட்ட முதலாளிகள் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவைக் கணித்து, சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு அரிசியின் விலையையே அளவுகோலாகக் கொள்ளும் கொடிய முறையைக் கையாண்டனர். ஏனெனில் ஒரு தொழிலாளியின் வருமானத்தின் முக்காற்பங்கு அரிசியின் விலையில் தங்கியிருந்தது. இவ்விதம் 1860களில் தோட்ட முதலாளிகளிடையே காணப்பட்ட இணக்கப்படி ஆணுக்கு 30 சதமும் பெண்ணுக்கு 25 சதமும் தேயிலைத் தோட்டங்களில் நாளாந்தச் சம்பளமாக வழங்கப்பட்டது. வாரத்திற்கு 5 அல்லது 6 நாள் வேலை செய்தால் தொழிலும் தொழிலாளருக்கு நியாயமான அளவு சேமிப்பும் வழங்கப் போதுமானதாக இருந்தது. (அரிசி ஒரு புசல் 4 ரூபாப்படி வழங்கப்பட்டது) (வசும்பெரும 1986:146).

குறைந்த சம்பளமும், குறைந்த அளவிலான பங்கீட்டுப் பொருட்களையும் தவிரப் பெண்களை உழைப்பாளிகள் என்ற வகையில் பாதிக்கின்ற வேறு காரணிகளும் இருந்தன. முதலாவதாக, பெண்கள் ஆண்களிலும் பார்க்க நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டி இருந்தது. குறித்த அளவான வேலைகள் ஆண்களுக்குக் கொடுக்கப்படுவதால், தமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடித்ததும் வீட்டுக்குப் போக முடியும். பெண் தொழிலாளி வேலை செய்தாலும், சம்பளத்தை நேரடியாக அவளுடைய கணவனிடம் கொடுப்பது நன்று என நினைத்து அவனிடமே கொடுக்கப்படுகிறது. ஆண் தொழிலாளி அவளது சம்பளத்தை எடுத்துக் கொண்டு வீடு போய் சேர்ந்தாலும் பெண் தொழிலாளி தொடர்ந்து வேலையைச் செய்து கொண்டிருக்க வேண்டி ஏற்படுகிறது. இது பெண் தொழிலாளியைப் பாதுகாக்கின்ற இரண்டாவது காரணி. அனேக சந்தர்ப்பங்களில் தனக்கு எவ்வளவு சம்பளம் போடப்பட்டது என்பதைக் கூட அவர்களால் அறிய முடிவதில்லை. மூன்றாவதாகப் பெண்களின் சம்பளம் ஆண்களிடம் நேரடியாகக் கொடுக்கப்படுவதால் இப்பணத்தை எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்பதைப் பெண்களால் கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றது. அதை எப்படிச் செலவு செய்வது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஆண்களுக்கே அளிக்கப்படுகிறது. மேலும் இப்பணம் குடும்பச் செலவுகளுக்குப் பயன்படாமல் குடி சூதாட்டம் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுவதால் அனேக சந்தர்ப்பங்களில், தமது பணத்தை நுகரும் வாய்ப்பு பெண்களுக்குக் கிடைப்பதில்லை.

வறுமையின் ஒரு குறியீடான கடன், தோட்டத் தொழிலாளரிடம் அதிகம் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் இருந்து இலங்கைத் தோட்டங்களுக்குத் தொழிலாளர்கள் வந்தபோது அவர்களது பிரயாணச் செலவு உணவு, உடை, மற்றும் செலவுகளுக்காக முற்பணம் வழங்கப்பட்டது. எனவே, தங்களது தொழிலின் ஆரம்ப கட்டத்தை அவர்கள் கடனிலேயே ஆரம்பித்தனர் என்பது உண்மையே. மேலும் இந்த முற்பணம் கங்காணியின் மூலம் வழங்கப்பட்டதால் அவர்கள்

கங்காணியிடம் கடன்பட்டவர்களாக ஆக்கப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் சில தோட்டச் சொந்தக்காரர்கள் செய்த கணிப்பின்படி ஒரு தோட்டத் தொழிலாளி சராசரியாக 70 ரூபா வரையில் கடனாளியாக இருந்ததாக கணிக்கப்பட்டார் (மஜோறி பாங்க்ஸ்-மரக்காயர் 1917:10). ஒரு தோட்டச் சொந்தக்காரரின் கணக்குப்படி 1907ம் ஆண்டில் ஒரு ஆணின் நாள் சம்பளம் 33 இல் இருந்து 43 சதமாகவும் பெண்ணின் சம்பளம் 25 இல் இருந்து 30 சதமாகவும் இருந்தது. இதில் இருந்து கடன் எவ்வளவு என்பது பற்றிய ஒரு கணிப்பைப் பெறமுடியும். உண்மையில் மிகக் குறைந்த அளவான (33-25 சதம்) சம்பளம் தான் 1885-1910 வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டு வந்தது என வசும்பெரும குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இதிலிருந்து 1889ம் ஆண்டின் முற்பகுதியில் இருந்த பொருளாதாரச் சீர்குலைவுப் பொழுதில் நிர்ணயிக்கப்பட்டிருந்த மிகக் குறைந்த சம்பள விகிதங்களே தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தன என இது காட்டுகிறது (வசும்பெரும 1986:148) தொழிலாளர் தங்கள் கடன்களைத் திருப்பிக் கொடுத்து தங்களை மீட்டுக் கொள்ளும் வாய்ப்பு மிக அரிதாகவே இருந்தது என்பதை இச்சம்பள அளவுகள் காட்டுகின்றன.

1917ம் ஆண்டு மஜோறிபாங்ஸ் மற்றும் மரக்காயரும் அளித்த அறிக்கைகளின்படி அவர்கள் நேர்கண்ட எந்த ஒரு தொழிலாளியாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட கடன் பற்றியோ அது எப்படி ஏற்பட்டதென்றோ கூறமுடியவில்லை. அதை முழுவதும் கணக்கில் வைக்கப்படுவதற்கு எதிர்ப்பு கூறக் கூட எவரும் முன்வரவில்லை. இக்கடனைத் தீர்ப்பதற்கு உள்ள ஒரே ஒரு வழி சம்பளத்தின் ஒரு பகுதியைக் கடனுக்காகக் கழிப்பது தான். கடனுக்காகக் கொடுக்கப்பட்ட தொகைப்பணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முற்பணத்திற்குச் சமமாக இருந்ததில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட்டது (இபிட்:10). இப்பிரச்சினைகள் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகளாலும் சம்பளத்தைத் தடுப்பது பற்றிய விதிகளாலும் மிகவும் மோசமாக்கப்பட்டது. முதலாவதாக வேலை கொள்வோருக்கும் தொழிலாளிக்கும் இடையே ஒப்பந்தம் வெறும் வாய்மொழியாக ஏற்கப்பட்ட ஒன்று. 1865ம் ஆண்டுக்கால சட்டவாக்கத்தின் 11ம் பிரிவின்படி இத்தகைய ஒப்பந்தங்கள் ஒரு மாதத்திற்கு மட்டுமே செய்யப்படுவனவாக அமைந்தன. இவ்வொப்பந்தங்கள் மாதந்தோறும் புதுப்பிக்கப்படக் கூடியதாக அமைந்தன. தொழிலாளரின் சம்பளங்கள் நாட்கணக்குப்படி கணிக்கப்பட்டு மாதந்தோறும் வழங்கப்படும் முறை பின்பற்றப்பட்ட பொழுதிலும் பழைய முறை தான் பின்பற்றப்பட்டது. இதன் மூலம் பார்த்தால் உண்மையாக வேலை செய்த நாட்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்கப்பட்டது.

மேலும் வேலை செய்ய மறுத்தல் அல்லது கைவிட்டு ஓடுதல் என்பன சம்பள இழப்பு அல்லது 3 மாதச் சிறைத் தண்டனைக்குரிய குற்றமாக இந்த சட்டவிதியின்படி அமைந்தது. ஒரு மாதச் சம்பளம் பெறப்படாமல் நிலுவையில் நிற்கும் ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மட்டுமே இச்சட்டத்தை அமுல்படுத்த முடியாது. இச்சந்தர்ப்பத்தில் அந்த மாதச் சம்பளத்தைக் கணித்து சகல முற்பணங்கள், உணவுக்காகவும் உடைக்காகவும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் யாவும் அதிலிருந்து கழிக்கப்படும். இவ்விதம் கடனாளியாகும் நிலை சுற்றிச் சுழன்று வந்தது. இதன்மூலம் என்றாவது ஒரு நாள் வேலை கொள்பவர் தனது கடன்களைக் கழித்து தனக்குப் பணம் தரக்கூடும் என்ற நம்பிக்கையில் தனது தொழில் கொள்வோருக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்யத் தொழிலாளர்கள் வற்புறுத்தப்படுகின்றனர்.

1880-1910ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்டங்களில் பொருளாதார நடவடிக்கைகள் ஓரளவு சுறுசுறுப்பாக இருந்த போதிலும் தொழிலாளர்களின் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்படவில்லை. இதற்கு மூன்று காரணங்கள் இருந்தன. முதலாவதாக, கங்காணிக்கும் தோட்ட முதலாளிக்கும் இடையே இருந்த தொடர்பு, சம்பள விகிதம் பற்றியதாக அல்லாது எவ்வளவு தொகை முற்பணமாக வழங்கப்பட்டது என்பது தொடர்பானதாக அமைந்தது. கங்காணிக்கு ஓரளவு தொகையை விட்டு எஞ்சிய தொகையை புதிய தொழில் கொள்வோன் கொடுத்தால் மட்டுமே தொழிலாளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இரண்டாவதாக, இக்காலகட்டத்தில் வேலை செய்யும் நாட்களின் தொகை அதிகரித்தது. இதனால் சம்பள விகிதம் அதிகரிக்கப்படாது ஒரே நிலையில் நின்றாலும் கூட வேலை நாட்கள் கூடியபடியால் கூடிய சம்பளம் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் இதன் விளைவுகள் மாறாக அமைந்தன. மூன்றாவதாக, தோட்ட நிர்வாகம் வேலை கொள்வோராகவும் அரிசியைப் பெற்றுக் கொடுப்பவராகவும் பணியாற்றியது. அரிசியின் விலை சம்பள விகிதத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்பட்டது. அரிசியின் விலை அதிகரித்தபோது தோட்டச் சொந்தக்காரர் தொழிலாளியின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது அரிசி விநியோகத்தால் நஷ்டம் ஏற்படுவதை ஏற்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். அனேகமான சந்தர்ப்பங்களில் அவர்கள் அரிசியின் விலையைக் கூட்டலாம், குறைக்கலாம். ஆனால் சம்பளத்தை ஏற்றினால் அது குறைக்க முடியாததாகிவிடும் என்பதால் அவர்கள் பின்னதையே தெரிவு செய்தனர்.

சம்பளம் கொடுக்கும் கால இடைவெளியை அதிகரிப்பது உற்பத்திச் செலவீனத்தைக் குறைப்பதற்கான ஒரு சிறந்த முறையாகக் கொள்ளப்பட்டது. கோப்பிப் பயிர்ச்செய்கைக் காலத்தில் ஆண்டிற்கு மூன்று அல்லது நான்கு முறை தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முறை இருந்து வந்தது (PP 69-70). இந்த நிலை பொருளாதாரநிலையில் ஏற்பட்ட மோசமான பாதிப்பின்போது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் தடைப்பட்டது. இதை 1888ம் ஆண்டில் ஆர்தர் கோர்டன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> அதிகமான தோட்டச் சொந்தக்காரர்கள் வழமையாகத் தமது கூலியாட்களுக்கு ஆண்டுக்கு நான்முறை மட்டுமே சம்பளம் வழங்குவார்கள். அப்போது அவர்கள் மூன்று மாதத்துக்கு முன் முடிவடைந்த காலாண்டுச் சம்பளத்தை வழங்குவார்கள். இது மிகவும் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. இந்த நிலையை சற்றுத் திருத்தி இம்முறையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதை அம்முறையே ஆலோசனை கூறுகிறது.

சம்பளத்தைக் கொடுக்காமல் மேலும் தடுத்து வைப்பதால் தொழிலாளர்களின் கடன்படும் தன்மை அதிகரிக்கச் செய்யும் என அவர் அவதானித்தார். இதனால் இக்கடன்களை மீளளிப்பதற்கு தோட்டத்தில் தனது சேவையையே நம்பி இருப்பதால் மேலும் மேலும் முற்பணம் பெறுகின்ற தொழிலாளி மேன்மேலும் தோட்டத்துடன் தன்னைப் பிணைத்துக் கொள்ளுகிறார். அத்தொழிலாளியால் சுதந்திரமாக மாதச் சம்பளம் பெற ஒருபோதும் இயலாது.

பெண்களைப் பொறுத்தவரை தொழிலாளிகளைப் பாதிக்கின்ற சகல கஷ்டங்கள் துன்பங்களினாலும் அவர்கள் துன்பப்படுகின்றனர். இருப்பினும் அவர்கள் நிலையில் சில குறிப்பிட்ட அம்சங்களும் உண்டு. முதலாவதாக அவர்களுடைய பணக் கொடுக்கல் வாங்கல்கள் (அவர்களுடைய சொந்த வருமானத்தைக் கூட) மற்றவர்களால் (பொதுவாக ஆண்களால்) செய்யப்படுகிறது. அதனால் அவர்கள்

அவ்வாண்களின் திறமைகள் வளங்கள் என்பவற்றில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இரண்டாவதாக கடன்களை மீளளிக்கவோ அல்லது மேலும் பணம் பெற நகைகளை அடைவு வைக்கவோ தேவை ஏற்படும்பொழுது பெண்களுடைய நகைகளைத் தான் கடனை அடைப்பதற்காக பலி கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இறுதியாக கடன் மீளளிக்க வருமானம் உணவு என்பன குறைக்கப்படும்போது மீண்டும் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே.

## தோட்டங்களில் வீடமைப்பு சுகாதார வசதிகள்

தோட்டங்களில் வீடமைப்பு என்பது பெண்களுக்கு மிகவும் துன்பம் தருகிறது. ஏனெனில் அந்த வீடுகளில் மிகவும் அதிகமாக வேலை செய்பவர்கள் அவர்கள் தான். தோட்ட நிர்வாகம் கொடுக்கும் வீடுகள் "லயம்" என்னும் அறைகள். இவை ஏனைய காலனி நாடுகளில் போல கல்லால் கட்டப்பட்டு உலோகத் தகடுகளால் வேயப்பட்டவை. சமகாலத் தோட்டச் சொந்தக்காரரின் கூற்றுப்படி இக்"கூலிகள்" சிறிய வீடுகளையே விரும்பினர். ஏனெனில் அவை சூடாகவும் குளிருக்கு இதமாகவும் இருப்பதால் போலும். அவருடைய கருத்துப்படி 12" X 12" அடி அளவுள்ள ஒரு அறை 12 தொழிலாளிகளுக்குப் போதுமானது. ஏனெனில் இப்படி நெருக்கமாக அடைக்கப்படுவதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை (சபோனடியர் 1866 : 66). இத்தகைய நிலைமைகளில் பெண்கள் அடையும் இக்கட்டான நிலைமையோடு பாலியல் துஷ்பிரயோகம், தமக்கென இடமின்மை, சமையல், துப்புரவு செய்தல் போன்றவற்றையும் இந்த "லயத்து அறைகளில்" பெண்கள் செய்ய வேண்டியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளரை அலட்சியப்படுத்தல் துஷ்பிரயோகம் செய்தல் குறிப்பாகப் பெண்களைப் பொறுத்தவரை 1883 - 1910 வரை வைத்தியசாலைகளில் மரணமடைவோர் தொகை 100ற்கு 22 வீதமாக இருந்தது. இம்மரணங்களுக்குரிய பிரதான காரணிகள் குடற்புழுநோய், வயிற்றோட்டம், வயிற்றுளைவு, பலவீனம் போன்ற தடுக்கக்கூடிய நோய்கள் ஆகும். ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும்பொழுது அங்கு மரணவிகிதம் 7.17% ஆகும் (இவை வசும்பெரும 1986 : 222 அட்டவணை 21.22 என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு பெறப்பட்ட கணிப்புகள்). 1887 - 1910ம் ஆண்டு காலப் பகுதியில் சிசுமரணம் பற்றிய கணிப்புகள் இதேயளவு மோசமான நிலையிலேயே காணப்படுகின்றன. தோட்டத் தொழிலாளரிடையே நிகழும் 1000 பிறப்புகளுக்கு 212 மரணங்கள் நிகழ்ந்தன. இதே சமயம் சிங்கள மக்களிடையே 169 மரணங்கள் நிகழ்ந்ததாகக் கணக்கிடப்பட்டது (1986 : 224 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது).

தோட்டங்களில் வேலை செய்த பெண் தொழிலாளரிடையே காணப்பட்ட தேகாரோக்கியமற்ற நிலைக்கு பெருந்தோட்டத் தொழில் அமைப்பு காரணமாக இருந்தது. குறிப்பாக நீண்ட நேரம் வேலை செய்வது, சுகாதாரமற்ற சூழல், போதிய நலன்புரி வசதிகள் இல்லாமை என்பன இதற்குக் காரணமாக அமைந்தன (வசும் பெரும 1986:221 - 248). ஊட்டச்சத்துக் குறைவான உணவு, இடையில் உணவு உண்ணாது நீண்ட நேரம் வேலை செய்வது போன்ற காரணிகள் காணப்படுகின்றன. முன்பு குறிப்பிட்டது போல, தொழிலாளர்கள் திரும்ப வேலைக்கு வரமாட்டார்கள் என்ற அச்சத்தால் அவர்கள் மதிய உணவுக்காகச் செல்ல அனேக சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் அங்குள்ள காலநிலைக்கேற்ற குளிர் தாங்கக்கூடிய உடைகள் அணிய அவர்களுக்கு வசதியில்லை. 'கம்பளி' என அழைக்கப்படும் முரட்டுத் துணியால் ஆக்கப்பட்ட ஒற்றை உடையைக் கூட அவர்கள் பெற வசதியில்லை. உடைகள் எப்பொழுதும் ஈரமாகவே இருக்கும் ஏனென்றால் அங்குள்ள காலநிலையில் உடைகளை உலர்த்துவதற்கு இயலாது.

அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படும் முறையால் அவர்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களுடைய சம்பளம் அவர்கள் வேலை செய்த நாட்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இதன் பொருள் தொழிலாளி உடல் நலமற்று இருந்த பொழுதிலும் தொடர்ந்து வேலை செய்யும்படி கங்காணி அவர்களை வற்புறுத்துவார். 1893ம் ஆண்டில் இறப்பு விகிதம் அதிகரித்தமையால் இதற்குரிய காரணத்தைக் கண்டறிய மாவட்ட வைத்தியசாலை இறப்புப் பற்றிய, விசாரணை ஆணைக்குழு ஒன்றை உள்ளூர் ஆட்சி இலாகா நியமிக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வாணைக்குழு ஏற்கனவே இருந்த வைத்தியசாலைகளைவிட தோட்டங்களுக்கென சிறு மருந்தகங்களை நிறுவும் முறையைப் பரிந்துரை செய்தது. இருந்த போதிலும் அங்குள்ள தொழிலாளர் தொகையுடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய தொகையினர் மட்டுமே வைத்தியவசதி பெற்றதாக அறியப்படுகிறது (வசும்பெரும 1986:272-273).

தோட்டத் தொழிலாளரின் வேலை நிலைகளும், தோட்டத்து வாழ்க்கை நிலையும் மிகக் கடினமானதாகக் காணப்பட்டது. சவுக்கினால் அடித்தல் போன்ற துன்புறுத்தல்கள் கூட இடம்பெற்றிருந்தன. அவை இங்கு குடியேறி வாழ்ந்த மக்களிடையே இறப்புவீதம் அதிகரித்ததற்குக் காரணமாயமைந்தன (வான்டீன் டிரைசன் 1982 - 10). பெண்கள் கடினமான வேலை, குறைந்த சம்பளம், வீட்டு வேலைகள் என்னும் மூன்று சுமைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. வீட்டில் வன்முறை, கவனக் குறைவான மகப்பேறு என்பன அப்பெண்களை நோய்களுக்காளாக்குவதோடு மரணங்களுக்கும் வழிவகுக்கிறது.

1869ம் ஆண்டில் குடியேற்ற நாட்டு உதவிச் சத்திர சிகிச்சை நிபுணரான வைத்திய கலாநிதி வான் டோற் என்பவர் 1843 இலிருந்து 1867ம் ஆண்டுக் காலப்பகுதியில் இங்கு குடியேறிய மக்களில் 350,510 பேர் அல்லது 24.6 சதவீதத்தினர் கணக்கில் காணப்படவில்லை எனக் கூறுகிறார். அவரது கூற்றுப்படி:

> இந்தக் கணக்கு விகிதாசாரப்படி பார்க்கும் பொழுது இறப்பு விகிதம் 4பேருக்கு 1ஆக இருக்கிறது. இது பற்றிய மேலதிக விபரம் அவசியமற்றது. தவறான கணிப்பீடுகள் என ஒரு தொகையைக் கழித்தாலும் கூட மலபாரில் இருந்து வந்த கூலியாட்களிடையே இறப்புவீதம் அதிகமாக இருந்தது. இந்த மரணங்களில் பெரும் பகுதி சுகாதாரமற்ற தன்மையால் ஏற்படுகின்றன. வடமாகாணத்தின் கரையோரப் பகுதியிலிருந்து தொடர்ந்து உட்பகுதிக்குப் போய்ச்சேரும் வரையும், இந்தக் குடியேற்ற வாசிகள் வசிக்கும் இடங்களிலும் மிகக் கடுமையான சுகாதார விதிகள் கடைப்பிடிக்கப்பட்டால் மரண வீதத்தை நிச்சயமாகக் குறைக்கலாம் (வான் டோற் 1868).

பதிவு செய்யப்பட்ட இறப்புகளிலும் பார்க்கக் கூடிய தொகையான இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை எனத் தோற்றுகிறது. இந்த நிலை பற்றிய ஒரு மதிப்பீட்டைப் பின்வரும் முறையில் செய்யலாம். இங்கு வந்து குடியேறியவர்களின் தொகையைக் குடிசன மதிப்பீட்டில் காணப்படும் தொகையுடன் கூட்டினால் அடுத்த குடிசன மதிப்பீடு எடுக்கும்பொழுது இருக்கக்கூடிய சனத்தொகையைக் கணித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு முறை பின்பற்றப்பட்ட பொழுது அதன் மூலம் கிடைக்கும் தொகை அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. 1871ம் ஆண்டிலும் 1881ம் ஆண்டிலும் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி தோட்டப் பகுதிகளின் சனத்தொகை முறையே 116,000 ஆகவும், 195,000 ஆகவும் இருந்தது. எப்படியும் 1871ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டில் கூறப்பட்ட தொகையோடு குடியேறியவர்களின் மொத்தத் தொகையும் சேர்ந்து 1881ம் ஆண்டு மதிப்பீட்டில் சனத்தொகை 307,132 ஆக

இருக்க வேண்டும். இதனுடைய பொருள் 1871 இற்கும் 1881 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 112, 132 ஆட்கள் பற்றிய கணக்கு காட்டப்படவில்லை. இந்தத் தொகை (1871ம் ஆண்டு சனத்தொகையின் 58%மாக இருந்தது) பதிவு செய்யப்பட்ட இறப்புகள், பிறப்புகள் 1881ம் ஆண்டு குடிசன மதிப்பில் சேர்க்கப்பட்டன. இதன் பொருள் குடிசனத் தொகையின் 11% வீதமானோர் ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட பிறப்பு இறப்புகள் தவிர காணாமல் போயிருக்கின்றனர். இதே போன்ற ஒரு மதிப்பீடு 1881 - 1891 காலப்பகுதி. (குடிசன மதிப்பீட்டுப்படி சனத்தொகை 195,000 ஆகவும் 235,000 ஆகவும் இருந்தது) மதிப்பீடு 63,505 ஆட்கள் காணாமற் போயிருப்பதாகக் காட்டுகிறது. பின்பு வந்த தசாப்தங்களில் இத்தொகைகள் மிகவும் அச்சமூட்டுவனவாக இருந்தன (1901 - 1911 இன் சனத்தொகை 407,000 ஆகவும் 458,000 ஆகவும் இருந்தது). இந்த மதிப்பீடுகள் முறையே 146,374 பேரும் 286,220 பேரும் காணாமற் போனதாகக் காட்டுகின்றன. உண்மையில் பார்க்கும்போது 1891-1901 காலப்பகுதியில் 1 வீதமான மக்கள் தொகை அதிகரிக்கும்பொழுது 1 1/2 வீதமானோர் காணாமல் போகின்றனர். 1901-1911 ஆண்டுக்கு இடைப்பட்ட தசாப்தத்தில் 1 ஆள் சனத்தொகையில் அதிகரிக்க 3 பேர் காணாமற் போகுமளவுக்கு அதிகரித்தது. அதேசமயம் சனத்தொகை மதிப்பீடு தொடர்பான நம்பகத்தன்மை பற்றி ஒருவர் வினா எழுப்பக் கூடும். அதே சமயம் தமது தொழிலாளர்கள் அனைவரையும் பதிவு செய்வதால் சொத்து வரி அதிகரிக்கும் என்பதால் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களைப் பதிவு செய்யாமலும் விட்டிருக்கலாம் என ஒருவர் வாதாடக் கூடும். ஆனால் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் இறப்புகளை விட காணாமற் போனவர்களின் தொகை அதிகமாக இருந்ததை வலியுறுத்திக் கூற வேண்டும். இந்தத் தொழிலாளர்களில் குறிப்பிடக் கூடிய அளவு தொகையானவர்கள் பதிவு செய்யப்படாத மரணங்கள் என்ற பிரிவில் சேர்க்கப்படுவர் என்ற முடிவுக்கு ஒருவர் வரலாம். இதன்படி இக்கால கட்டத்தில் அசாதாரணமான தொகையான மரணங்கள் தோட்டத் தொழிலாளரிடையே ஏற்பட்டமை வெளிப்படுகிறது.

மரண விகிதங்கள் அதிகரித்த இந்த நிலை பெருந்தோட்டப் பொருளாதாரத்துடன் நேரடித் தொடர்புடையது. தொழிலாளர் தொகை அதிகரிப்பு, தோட்டங்களில் வேலை, வாடிக்கை என்பவற்றின் மிகப் பயங்கரமான நிலை என்பவை இதன் பயனாக அமைந்தன. பிரதானமான விஸ்தரிப்பு 1890ம் ஆண்டின் பின் இடம்பெற்றது. தொழிலாளர்கள் மிகத் தெளிவான முறையில் தரப்பட்டனர். அத்துடன் அது கேட்பாரற்ற நிலையில் அமைந்தது. இந்த நிலையுடன் தோட்டங்களில் தொழிலாளருக்கு அளிக்கப்பட்ட மிகமோசமான வைத்திய வசதிகளும் இணைந்து கொண்டன. தொழிலாளருக்கு வழங்கப்படும் வைத்திய வசதிகளுக்கான செலவை யார் ஏற்றுக் கொள்வது என்ற விடயத்தில் காலனித்துவ அரசுக்கும் பெருந்தோட்ட முதலாளிகளுக்கும் இடையே இழுபறியாக இருந்தது. 1872ம் ஆண்டு சட்டத்தின் 14வது பிரிவு திருப்திகரமாக இல்லாமையால் அதற்குப் பதிலாக மருத்துவ சேவைக்கான சட்ட இல.17 1880ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

எப்படி இருந்தபோதிலும் காலனி அரசாங்கத்துக்கும் தோட்டச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய நிதியை எப்படி யார் கொடுப்பது என்ற விடயமாக பல அபிப்பிராய பேதங்கள் இருந்தன. அரசாங்கம் பெருந்தோட்டச் சொந்தக்காரர்களே முழுச் செலவையும் கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியது. ஆனால் இதை தோட்டச் சொந்தக்காரர்கள் வன்மையாக எதிர்த்தனர். இச்செலவை அரசுதான் பொறுக்க வேண்டும் என அவர்கள் வாதாடினர். லண்டனில் இருந்த காலனி ஆட்சிக்குப் பொறுப்பான

அலுவலகம் உள்ளூர் ஆட்சிக்குக் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக 1881ம் ஆண்டு 11ம் இலக்கச் சட்டவாக்கம் கொண்டுவரப்பட்டது. அச்சட்டப்படி (தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் தொகைக்கேற்ப) வரி விதிக்கப்பட்டது. இந்த வரிப்பணத்தைக் கொண்டு வைத்திய வசதித் திட்டத்தை நடத்த வேண்டும் எனக் கூறப்பட்டது. 1882ம் ஆண்டில் வைத்திய நலன்களுக்கான செலவில் அரைப்பங்கை தான் ஏற்றுக்கொள்ள அரசு இணங்கியது. அத்துடன் முதல் வரிக்குப் பதிலாக அரிசியின் இறக்குமதிக்குக் குறைந்த அளவான வரியை 1882ம் ஆண்டு 8ம் இலக்கச் சட்டவாக்கத்தின்படி விதித்தது. எப்படி இருந்தாலும் மேலதிக செலவுகள் ஏற்படும் சமயங்களில் தொழிலாளர்களுக்கு அரிசி கொடுப்பதன் மூலம் பெறப்பட்ட இலாபத்தில் இருந்து அத்தொகை ஈடுசெய்யப்பட்டது (வசும்பெரும 1986 : 251).

1982ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வைத்தியத் தேவைகளுக்கான சட்டம் தோட்டங்களில் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கான முதல் அடியாகும். சட்டம் தொழிலாளர்களின் வைத்தியத் தேவைகளுக்கான செலவைத் தோட்ட முதலாளிகளே கொடுக்க வேண்டியது என சட்டப்படி கடமையாக்கப்பட்டது. அச்சட்டப்படி தாய்மை அடையும்போது பிரசவ காலத்தில் சில சலுகைகள் (போதிய அளவு உணவு, வசிப்பிடம் ஒரு மாத காலத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும்; அத்துடன் ஒரு மாதகால விடுமுறை) கொடுக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னைய காலத்தில் பெண்கள் பெற்ற ஒரே ஒரு சலுகை வாரத்துக்கு 2 கொத்து அரிசியும் 75 சதம் பணமாகவும் நான்கு வாரங்களுக்குக் கொடுக்கப்பட்டது. வழமை போல அந்தக் கூடுதலான அரிசி ஆண்களாலும் குழந்தைகளாலும் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெண்கள் நன்மையடையவில்லை. கொடுக்கப்படும் பணம் கூட குடும்பக் கடன்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

## கல்வி

தோட்டத் தொழிலாளர்களின் கல்வி (குறிப்பாக பிள்ளைகளுக்கு) என்பது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாத ஒன்றாக இருந்து வந்தது. இங்கிலாந்தில் உள்ள மனிதநேயமுள்ளவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் குறைந்த அளவிலாவது கல்வி வசதிகள் கொடுக்க வேண்டும் என இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூறப்பட்டபோது அதைத் தோட்ட முதலாளிகள் எதிர்த்தனர். பிள்ளைகளும் தோட்டங்களில் வேலை செய்வதன் மூலம் தொழிலாளர்களுக்கு மேலதிக வருமானம் பெற்றுக்கொள்ள முடியும் என அவர்கள் வாதிட்டனர். அத்துடன் கல்வி கட்டாயமாக ஆக்கப்பட்டால் தோட்டங்களில் தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அவர்கள் அஞ்சினர். இவ்விதம் இங்கிலாந்தில் இருந்தும் குடியேற்ற நாட்டு அரசாங்கத்திடம் இருந்தும் கொடுக்கப்பட்ட புற அழுத்தங்களால் 1920ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கல்விச் சட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி அளிக்கப்பட வேண்டியது தோட்ட முதலாளிகளுக்குக் கட்டாயமாக்கப்பட்டது.

1920 இலிருந்து 1948ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் கல்வியின் தரம் மிகக் குறைவாக இருந்தபோதிலும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் தொகை அதிகரித்தது. 1920ம் ஆண்டில் ஆறு வயதில் இருந்து பத்து வயது வரையுள்ள பிள்ளைகளில் ஆக 18% மட்டுமே பாடசாலைக்குச் சென்றனர். 1948ம் ஆண்டளவில் இத்தொகை 58% மாக அதிகரித்தது. பெண்பிள்ளைகளின் கல்வியில் வேற்றுமை காட்டப்பட்டது. அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டி இருந்ததால் பாடசாலைக்குச் செல்ல மிகக் குறைவான சந்தர்ப்பமே வழங்கப்பட்டது.

1929ம் ஆண்டுக்கும் 1944ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பாடசாலை செல்லும் வயதுடைய பெண்பிள்ளைகளில் 36% மட்டுமே பாடசாலைக்குச் சென்றனர். அதேசமயம் ஆண்பிள்ளைகளில் 67% பாடசாலைக்குச் சென்றனர். (இக்காலப்பகுதிக்கு மட்டுமே பால்வேறுபாட்டுப்படி பிள்ளைகளின் விபரம் பெறக்கூடியதாயிருந்தது). 1944ம் ஆண்டில் பாடசாலை செல்ல வேண்டிய வயதுள்ள பெண்பிள்ளைகளில் 45% தினரும் ஆண்பிள்ளைகளில் 68% தினரும் பாடசாலைக்குச் சென்றனர். இக்காலப்பகுதியில் ஆண்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் வீதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படவில்லை என்பதைக் காண்கிறோம் (அதிகரிப்பு 28,667 இலிருந்து 29,408). ஆனால் பெண்பிள்ளைகளின் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருப்பதைக் காண முடிகிறது (12,192 இலிருந்து 19,812). எப்படியோ கல்வி அறிவு அதிகரித்ததனால் அதன் பிரதிபலிப்பு பெருந்தோட்டத் தொழிலாளரின் அரசியல் வளர்ச்சியிலும் பெண் தொழிலாளர்களிடையேயும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் குறிப்பிடுவது அவசியம்.

## பெண் தொழிலாளர்கள் எதிர்த்து நிற்றல்

பெண்கள் தனித்தும் கூட்டாகவும் எதிர்த்துச் செயற்பட்டமை பற்றி வரலாற்றுப் பதிவுகளில் அதிகம் கூறப்படாவிட்டாலுங்கூட அவர்கள் எதிர்ப்பே காட்டாதிருந்தனர் என்று கூறுவது ஒரு தலைப்பட்சமானது. அவர்கள் இரண்டு விதத்தில் தமது எதிர்ப்பைக் காட்டினர் என இங்கு கூறுவது அவசியம். அவை வேலைக்குச் செல்லாதிருப்பது, தோட்டத்தை விட்டுத் தப்பியோடுவது என்பனவாகும்.

எதிர்ப்புக் காட்டுவதற்காக வேலைக்குச் செல்லாதிருப்பது பற்றி சேர் கியூ கிளிபேட் தலைமையில் அமைந்த 1908ம் ஆண்டு தொழில் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் சிறந்த சாட்சியங்களாகும். தாழ்ந்த பிரதேசங்களில் வேலைக்குச் செல்லாதிருக்கும் முறை மிக அதிகமாகக் காணப்பட்டது. அங்கு வேலைக்குச் செல்வோர் தொகை மிகக் குறைவாக 68%-70% வரையில் இருந்ததாக சாட்சியங்கள் காட்டுகின்றன (தொழில் ஆணைக்குழு அறிக்கை 1908:371-430). அனேக சாட்சியங்கள் கடன்பட்ட நிலைக்கும் வேலைக்குச் செல்லாதிருப்பதற்கும் தொடர்பிருப்பதாகக் கண்டறிந்தனர். றைற், ஹ"சி எலியற் என்னும் இருதோட்டச் சொந்தக்காரர்கள் கடன் பளுவினால் நாளாந்தம் 30% மானோர் வேலைக்குச் செல்லாதிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர் (இபிட் 357:25).

வேலை முறையின் அழுத்தங்கள் காரணமாக எதிர்த்து நிற்கத் தொழிலாளர்கள் கையாண்ட இன்னுமொருமுறை தோட்டங்களில் இருந்து தப்பியோடுதல் ஆகும். இந்த முறை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் முதல் இரண்டு தசாப்தங்களில் மிக அதிகம் இருந்ததாகக் காணப்பட்டது. உண்மையில் இதனால் அச்சமுற்ற தோட்டச் சொந்தக்காரர்கள் 1902ம் ஆண்டில் இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்காக ஒரு விசேட குழுவை நியமித்தனர். (வசும் பெரும 1986:1920). நேரடியாக கடன்பழுவின் தாக்கத்தினால் தொழிலாளர் தப்பி ஓடவில்லை. மேலும் முற்பணம் பெற முடியாத நிலையே அவர்களைத் தப்பி ஓடவைத்தது. 1908ம் ஆண்டு நியமிக்கப்பட்ட தொழில் ஆணைக்குழு இந்த அச்சம் தரும் தப்பி ஓடும்நிலை பற்றிக் குறிப்பிட்டது. அத்துடன் இதற்கும் தொழிலாளரின் கடன்பட்ட நிலைக்கும் தப்பி ஓடுதலுக்கும் இடையே உள்ள தொடர்பு இங்கு குறிப்பிடப்பட்டது.

தோட்டத் தொழிலாளரின் குறிப்பிடத்தக்க அளவிலான அரசியல் போராட்டங்கள் 1930ம் ஆண்டளவில் ஆரம்பித்தன. டொனமூர் ஆணைக் குழுவின் சிபாரிசுப்படி

சர்வசன வாக்குரிமை 1931ம் ஆண்டு வழங்கப்பட்டது. இதன் மூலம் பிரதானமாக ஹற்றன், தலவாக்கலை பகுதியில் ஏறக்குறைய 100,000 தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டனர். ஒரே தோட்டத்தில் ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ந்து வசித்ததை ஆதாரமாகக் காட்டிப் பெருந்தொகையான பெண்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டனர். அவர்களுடைய ஆதரவுடன் 1931ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இரண்டு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இது 1936ம் ஆண்டு அரசாங்க சபைக்கு இரண்டு அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் அவர்கள் பலத்தை மேலும் உறுதிப்படுத்தியது. உலக மகாயுத்தத்தின் காரணமாக 1941ம் ஆண்டு சோல்பரித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற தேர்தலில் தோட்டத் தொழிலாளர் 7 அங்கத்தவர்களைத் தெரிவு செய்யக் கூடியதாக இருந்தது. அதே சமயம் 13 அல்லது 14 தேர்தல் தொகுதிகளில் அவர்கள் தமது வாக்குப் பலத்தைக் காட்டக் கூடியதாக இருந்தது.

1930ம் ஆண்டில் தோட்டங்களில் தொழிலாளர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கும் பெண்கள் வழமையான வேலை நிறுத்தங்கள் மட்டுமன்றி சில வழமைக்கு மாறான முறையில் எதிர்ப்புகளையும் காட்டினர். 1931ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்திலும் 1939ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரிச் சார்புள்ள அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்திலும் பெண்கள் அங்கத்தவர்களாயிருந்தனர். அத்துடன் 1939ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை இந்திய காங்கிரசிலும் பெண்கள் அங்கத்துவம் வகித்தனர். அவர்கள் வேலை நிறுத்தங்களில் மிக உற்சாகமாகப் பங்குபற்றினார்கள். அத்துடன் கங்காணிமாரின் நடத்தைகளை எதிர்த்தும், தொழிலாளர் உரிமைகளுக்காகவும் சம்பள உயர்வுகோரியும் ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றினர். 1942ம் ஆண்டு விதிக்கப்பட்ட பாதுகாப்புச் சட்டப்படி, வேலை நிறுத்தங்கள் தடை செய்யப்பட்டிருந்த போதும் கூட அவர்கள் தங்களது வேலை முறைகள் பற்றி எதிர்ப்புக் காட்டத் தயங்கவில்லை. பெண்கள் தங்கள் கொழுந்துக் கூடைகளுடன் கங்காணியைச் சூழ நின்று எப்படி அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பது பற்றி, பல வாய்மொழி மூல விபரங்கள் கிடைத்துள்ளன. இவை மட்டுமன்றி மெதுவாக வேலை செய்தும் கூடைகளைக் கவிழ்த்தும், நிறுக்கப்பட்டபின் கூடையிலுள்ள கொழுந்துகளை வீசி எறிந்தும் அவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இவற்றின் மூலம் உத்தியோகபூர்வமாக வேலை நிறுத்தம் செய்ததாகக் கைது செய்யப்படுவதைத் தவிர்த்ததோடு தமது எதிர்ப்பை நேரடியாக உற்பத்தியைப் பாதிக்கும் வழியில் காட்ட முடிந்தது.

இருந்த போதிலும் தொழிற் சங்கங்களுக்கும் தோட் நிர்வாகத்துக்கும் இடையில் இணக்கப்பாடுகள் ஏற்படும் பொழுது பெண்கள் எப்பொழுதும் ஓரங்கட்டப்படுவது மிகவும் துரதிஷ்டமானது. 1940ம் ஆண்டு செய்யப்பட்ட ஏழு விடயங்கள் கொண்ட இணக்கம் மூன்று தோட்ட நிர்வாக அமைப்புகளுக்கும் மூன்று தொழிற்சங்கங்களுக்குமிடையே மேற்கொள்ளப்பட்டது. மற்றும் 1941ம் ஆண்டு சம்பள நிர்ணய சட்டம் என்பனவற்றிலும் தொடர்ந்து அதே ஆண்டில் வந்த சட்டங்களிலும் பல்வேறுபட்ட தொழில்களுக்கும் பல்வேறுபட்ட சம்பள விகிதங்கள் அமைக்கப்பட்டமை தொழிலாளர்கள் பெற்ற குறிப்பிடத்தக்க நன்மைகள் ஆகும். இருந்தபோதிலும் பெண்கள் தொடர்ந்தும் ஆண்களிலும் பார்க்க குறைந்த சம்பளமே பெற்றனர். மேலும் அவர்களுக்குக் கடுமையான நேரம் எடுக்கின்ற, திரும்பத் திரும்பச் செய்கின்ற ஒரே விதமான வேலைகளே வழங்கப்பட்டன. அவர்கள் மேல் ஆண்கள் ஆதிக்கம் செலுத்துவதை எவருமே தட்டிக்கேட்க முன்வரவில்லை.

## References:

Ceylon Labour Commission: *Ceylon Labour Commission Handbook*, Dodson Press, 1935.

Clifford H. *Report and Proceedings of the Ceylon Labour Commission* headed by Sir Hugh Clifford, Colombo 1908.

Corea, Gamini *The Instability of the Export Economy* (Colombo, Marga Institute, 1975).

Gough, K. *Rural Society in Southeast India* (Cambridge, Cambridge University Press, 1981).

Ferguson, J., *Ceylon in 1893 (London, J.Haddon & Co., Colombo, A.M. & J. Ferguson, 1893).*

Jayaraman, R. *Caste Continuities in Ceylon: A Study of the Social Structure of Three Tea Plantations* (Bombay Popular Prakashan Press, 1975).

Jayawardena, Kumari *The Rise of the Labor Movement in Ceylon* (Durham, North Carolina, Duke University Press, 1972).

Kumar, D. *Land and Caste in South India: Agricultural Labour in the Madras Presidency during the Nineteenth Century* (Cambridge, Cambridge University Press, 1965).

Majoriebanks and Marakkayar: *Report on Indian Labour Emigration to Ceylon and Malaya by* Majoriebanks, N.E. and Marakkayar, A.R. (Madras, Government of India, 1917).

Roberts, M and L.A. Wickremeratne, "Export Agriculture in the Nineteenth Century" in K.M.de Silva *(edited) University of Ceylon, History of Ceylon, Vol.III* (Colombo, University of Ceylon, 1973).

Sabonadiere, W. *The Coffee Planter of Ceylon* (Colombo, Mees, J.P.Green and Co., 1866).

Sarkar, S. *Modern India 1885 - 1947*, (New Delhi, Macmillan, 1983).

Snodgrass, D.R. *Ceylon: An Export Economy in Transition* (Homewood, Illinois, Richard D. Irwin, Inc. 1966).

Van Dort, W.G. *Report on the Gampola Civil Hospital (in Correspondence on the Condition of Malabar Coolies in Ceylon* (Enclosure No.1 in No.1) CO 54/475.

Wesumperuma, D. *Indian Immigrant Plantation Workers in Sri Lanka; A Historical Perspective 1880 - 1910* (Kelaniya, Vidyalankara Press, 1986).

Whitely Commission: *Report of the Royal Commission on Labour in India* (Chairman J.H. Whitely) London 1931.

Available at the
Suriya Bookshop

TEA PLANTATIONS IN CRISIS
by P.P. Manikam—Rs. 100

PRIVATISATION OF TEA PLANTATIONS
The Challenge of Reforming Production Relations in Sri Lanka: An Institutional Historical Perspective
by N. Shanmugaratnam—Rs. 150

In Sinhala and Tamil

LABOURING TO LEARN
Towards a Political Economy of Plantations, People and Education in Sri Lanka
by Prof. Angela W. Little

*Suriya Bookshop*

425/15, Thimbirigasyaya Road
Colombo 5. Sri Lanka
Tel: 501339, Fax:595563
E-mail: ssa@eureka.lk

அன்பளிப்பு

ஸ்ரீ —நிதர்சன்

உருவில்

Thankyou